
இயேசு
அழைக்கிறார்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஜோதிட [illegible]

NO: 12

எழுதியவர்

T. L. [illegible]

தொகுப்பு

P. இளங்கோவன்

[illegible] பதிப்பகம்
[illegible]

விலை (இந்தியாவில்) ரூ. [illegible]

First Ed. October '79

Copy Right

PEACE PUBLICATIONS

[illegible] STREET

NAGERCOIL-629 001

INDIA

[illegible]

[illegible] [illegible]

Edited and Published by [illegible], [illegible] Street, Nagercoil - 629 001, India

இயேசு சுகமளிக்கிறார்

உள்ளே ...

1. சுகமளிக்கிறவர்
2. வார்த்தை
3. கொலை பாதகன்
4. நிபந்தனை
5. ஜெபம்
6. விசுவாசம்
7. கிரியை
8. கருத்தடக்கம்
9. அற்புதங்கள்
10. உங்களோடு

USED BY PERMISSION

OSBORN FOUNDATION

INTERNATIONAL



எமது வெளியீடுகள்

தேவசகாயதாசன்
ஆத்மராகம்
இயேசு யார்
புதிர் நிருபம்
ஆறுதல் அன்பர்
வெற்றி நோக்கி
ஜெபம்
பாதங்களைக் கழுவுதல்
குழந்தை வளர்ப்பு
பலியின் கிரகம்

ஆவிக்குரிய ஆலோசனைகள்
மற்றும் ஜெபத்தேவைகட்கும்
தொடர்பு கொள்ள

P. ILANGOVAN
Puthalha street
Nagercoil - 629 001
India

ஆசிரியர் பேசுகிறார்

அற்புத சுகமளிக்கும் ஊழியத்தில் கடந்த வருஷங்களிலுள்ள அனுபவத்தின் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நாங்கள் ஜெபித்திருக்கிறோம்.

மரித்தோரை உயிரோடு எழுப்புவதும், குஷ்டரோகிகளுக்கு சுகமளித்தலும் இன்னும் யூகிக்கக்கூடிய எல்லா வகையான அற்புதங்களையும் நாங்கள் கண்டிருக்கிறோம்.

வியாதியஸ்தர் அற்புத சுகம் அடைவதற்கு ஆதாரமான வேத •உண்மைகளைக் கொண்ட விசுவாசம் அடங்கியதும்-இலகுவாக விளங்கக் கூடியதும்-தெளிவாகக் கடைப்பிடிக்கக் கூடியதும்-தெய்வீக சுகத்தைப்பற்றிய கருத்துக்கள் அடங்கியதுமான உபதேசங்களை வேதாகமத்திலிருந்து எடுத்துச் சிறியதோர் புத்தகங்களாகத் தொகுத்து வெளியிடுவதின் அவசியத்தை வருஷக்கணக்காக உணர்ந்து கொண்டு வந்தேன.

இந்த அவசியத்தை நிவர்த்திக்க வேண்டுமென்று கிறிஸ்துவினால் அற்புத சுகம் பெறக் கீழ்க்காணும் ஏழு படிகளைச் சுருக்கமாக-கவனமாகக் குறிப்பிட்டுள்ளோம்.

அற்புத சுகம் பெறுவதற்கு அத்தியாவசியமான-உறுதியான விசுவாசத்தையும், எல்லா முக்கியமான சத்தியங்களையும் இந்த ஏழு படிகளும் கூடுமானவரை கவர்ந்து விட்டன.

ஒவ்வொரு படியும் திடநம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவாறு விசேஷமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இப்படிகள்தான் பல்லாயிரக்கணக்கில் அவதிப்படுவோர்களுக்கு விசுவாசத்தையும்-விடுதலையையும் அளித்திருக்கிறது.

அவதிப்படுவோர் அற்புத சுகமடைவதற்கு வேண்டிய விசுவாசத்திற்கேதுவான ஆதாரம் வேதாகமத்தில் தெளிவாகப் போதிக்கப்பட்டிருப்பதை அறியாத நிலைமையிலுள்ள 95 சதமானோர் இதனைக் கிறிஸ்துவிடமிருந்து தேடியும் கண்டடையாது இருக்கிறார்கள்.

நாங்கள்ஜெபிக்கும் போதே சுகம் அடையாதோர் கூட வேதாகமம் தெளிவாகப் போதிப்பதை தாங்களாகவே அறிந்துணர்ந்து, தங்களுடைய சொந்த விசுவாசத்தினாலே அற்புதமாகச் சுகம் அடைந்திருக்கிறதை நூற்றுக்கணக்கான சமயங்களில் கண்டறிந்துள்ளோம்.

முற்றிலும் செவிடான ஓர் மனிதர் ஜெபிக்கப் படும்படியாக வந்தார். அவருக்குச் சுகம் கிடைக்கும் படியாக நான் ஜெபித்தபொழுது அவர் கண்ணீர் சிந்தி அழுதார்.

உடனே சுகம் கிடைத்ததான அத்தாட்சி வெளிப் படவில்லை. அந்த மனிதர் அதிக ஏமாற்றம் அடைந்த வராக மேடையை விட்டுச் சென்றார்.

நாங்கள் தெய்வீக சுகம் பற்றிய இவ்விதமான ஒரு பிரதியை அவருக்குக் கொடுத்தோம். அவர் அதைக் கவனமாய் வாசிப்பதாய்ச் சொன்னார்.

இரண்டு நாட்கள் சென்றபின் செவி நன்கு கேட்கிற வராகவும், களிப்புடையவராகவும் திரும்பி வந்தார்.

அவர் எங்களுடைய பிரதியை வாசித்ததாகவும் அதன் உதவியைக் கொண்டு சுகம் கிடைப்பதற்கான வேத உண்மைகளை அறிந்து பழகிக் கொண்டார். என்றும் அதற் கேற்ற விசுவாசம் உண்டானது என்றும் உடன் தானே சுகமடைந்தார் என்றும் சொன்னார்.

இதைப்போன்ற உதாரணங்களைத் திரும்பவும் திரும் பவும் நூற்றுக்கணக்கில் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆயினும் இதில் அடங்கிய மூலப்பொருட்கள் நாங்கள் சொல்லியவற்றை நிரூபிப்பதற்குப் போதுமானவை.

''சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' (யோ 8:32) என்று இயேசு சொன்னார்.

''விசுவாசம் தேவனுடைய வசனத்தைக் கேட்கிறதினால் வரும்'' (ரோ 10:17) என்று பவுல் சொன்னார்.

தேவனுடைய வல்லமையினால் சுகமடையவும், அவரைத் தங்களுடைய ஜீவியத்தில் மகிமைப்படுத்தவும் வாஞ்சையுள்ளவர்களாய்க் காணப்படுகிற அவதியுற்றோரின் நலனுக்காகச் சுருக்கமான குறிப்புகளோடு இப்புத்தகத்தை ஆயத்தப்படுத்தியுள்ளோம்.

வியாதியஸ்தர் ஒவ்வொருவரும் ஜெபிக்கப்படுவதற்கு அல்லது தேவன் தன்னைச் சுகப்படுத்தும்படி அவரைக் கேட்குமுன், இந்த ஏழு படிகளையும் நன்கு அறிந்து பழகிக் கொள்வார்களேயாகில் நிச்சயம் அவர்களுடைய ஜெபங்களுக்குப் பதில் கிடைக்கும்.

T. L. ஆஸ்பார்ன்.

1 இயேசு சுகமளிக்கிறவர்

அற்புதங்கள் நடைபெறும் காலம் கடந்து போய் விடவில்லை. ஆயினும் இன்றைக்கும் சரீரத்துக்கு சுகமளிப்பது கிறிஸ்துவின் ஊழியத்தில் ஒரு பாகமாகும் என்பதை அறிவதே கிறிஸ்துவிலிருந்து உண்டாகும் அற்புத சுகத்தைப் பெற்றுக் கொள்ளுவதின் முதலாம் படியாகும்.

வேதாகம நாட்களில் வியாதியஸ்தர் சுகமடைந்தனர். குருடர் பார்வையடைந்தனர். செவிடர் கேட்டனர், சப்பாணிகள் நடந்தனர். குஷ்டரோகிகள் சொஸ்தமாக்கப் பட்டனர்.

அல்லல்பட்டோரும், எல்லாவகையான வியாதியஸ்தரும் தெய்வீக வல்லமையால் சுகமடைந்தனர்.

அன்று எப்படி இருந்ததோ, அதுபோலவே இந்த அற்புதங்கள் இன்னும் சபைக்குரியனவாயிருக்கின்றன..

இதை எவ்விதம் அறியலாம் என்பதற்கு ஆதாரமான-அடிப்படையான - ஐந்து காரணங்கள் உண்டு.

1 தேவனே பரிகாரி.- (யாத் 15:26) அவர் ஒரு போதும் மாருதவர். ''நான் கர்த்தர், நான் மாருதவர்'' (மல்கி 3:6)

2 இயேசு கிறிஸ்து: வியாதியஸ்தரை சுகப்படுத்தினார். (மத் 9:35, மாற் 6:55, 56, அப் 10:38) அவர் ஒருபோதும் மாறவேயில்லை.

''இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாருதவர்'' (எபி 13:2)

3. இயேசு தம்முடைய சீஷர்களுக்கு வியாதியைச் சுகப்படுத்தக் கட்டளையிட்டார் (மத் 10:1-7, லூக் 10:1, 8, 9) அன்று இருந்தது போலவே இன்றும் கிறிஸ்துவின் உண்மையான சீஷன் இருக்கிருன்.

''நீங்கள் என் வார்த்தையில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்'' (யோ 8:31)

4: ஆதிச் சபையின் ஊழிய காலத்தில் தெய்வீக சுகம்பெறும் அற்புதங்கள் எங்கும் வியாபித்திருந்தன.

(அப் 3:6, 4;29, 5:12, 6:8, 8:5, 14:3-10, 19:11-12, எபி 2:3-4)

உண்மைச்சபை மாறவேயில்லை. அப்போஸ்தலர் நடபடிகளில் உண்மையான சபையின் பிறப்பும், வளர்ச்சியும் எழுதப்பட்டிருக்கிறது.

இதுவே ''உலகத்தின் முடிவு பரியந்தம்'' (மத் 28:20) மாதிரியும், உதாரணமுமாகும்.

5. வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள்; அப்பொழுது, ''அவர்கள் சொஸ்தமாவார்கள்'' என்றும் உலகத்தின் முடிவு பரியந்தம் எல்லா ஜாதிகளுக்குள்ளும் உள்ள எல்லாவிசுவாசிகளுக்கும் இயேசு கட்டளையிட்டார். (மாற் 16:15-18)

உண்மையான விசுவாசிகள் மாறிவிடவில்லை என்பதும் நிச்சயமே, ''என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்'' (யோ 14:12) என்று இயேசு சொன்னார்.

தெய்வீக சுகம் என்பது முன்பு யெகோவாகிய தேவனாலும், பின்பு அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினாலும், அவருடைய சீஷர்களினாலும், அதன் பின்பு ஆதிச்சபையினாலும், கடைசியாக உலகம் எங்குமுள்ள எல்லா விசுவாசிகளினாலும் நடப்பிக்கப்பட்டுள்ளது.

ஆகவே அற்புதங்கள் நடைபெறும் காலம் ஒழிந்து விடவில்லை. எப்பொழுதும் இருந்தது போலவே சரீர சுகமளித்தலும், கிறிஸ்துவின் ஊழியத்தில் இன்னும் ஒரு பாகமாகவே இருந்து வருகிறது.

வேதத்திலிருந்து, தேவன் தாமே சுகமளிக்கிறவர் என்கிற வாக்குத்தத்தங்களை அறிந்து கொள்ளுவதும், அவை தனிப்பட்ட நிலைமையில் உனக்காகவே உண்டுபண்ணப்பட்டிருக்கின்றன என்பதை உறுதியாக உணர்ந்து கொள்வதும், கிறிஸ்துவிலிருந்து உண்டாகும் அற்புத சுகத்தைப் பெற்றுக்கொள்வதின் இரண்டாம் படியாகும்.

நம்முடைய எஜமானுகிய ஆண்டவர் தாமே நம்மோடு பேசுகிருர் என்கிற கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய பல காரியங்களை அநேக முறைகளில் மதப் பிரசாரகர்கள் நமக்கு நன்மை செய்வதற்கு பதில் இவ்வித சத்தியத்தை தங்களுடைய உபதேசமாக அல்லது தத்துவ சாஸ்திரமாக ஆக்கிக்கொள்ளுவதினுல் அதிக தீங்கையே உண்டுபண்ணுகிருர்கள். வார்த்தை என்பது அவருடைய சத்தமாகும். அதற்கு அவருடைய அதிகாரமுண்டு.

நீங்கள் வேதத்தை வாசிக்கிறபொழுது, நீங்கள் தேவாதி தேவனேடு தனிப்பட்ட முறையில் சம்பாஷிக்கிறீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

ஆரோக்கியமான விசுவாசத்திற்கு பூரணமான, நேர்மையான எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையே ஒரே அடிப்படையாகும்.

தேவனுடைய வார்த்தையைச் சாதாரணமான ஒரு புத்தகம்போல் எண்ணிக் கொள்ளுவதே இன்றைக்கு அநேகர் செய்யும் மாபெரும் தப்பிதமாக இருக்கிறது.

கிறிஸ்து தம்முடைய மாமிச சரீரத்தில் உங்கள் மத்தியில் இருந்தால் அவருக்கு எந்த ஸ்தானத்தைக் கொடுப்பீர்களோ அந்த ஸ்தானத்தை அவருடைய வார்த்தைக்குக் கொடுக்கவேண்டும்.

அது கேட்கத்தக்கவிதமாக அவர் உன்னோடு பேசினால் எவ்விதம் இருக்குமோ அவ்விதமே அருடைய வார்த்தை உன்னோடு பேசுகிறது.

தேவனை அவருடைய வார்த்தையினின்று நீங்கள் பிரிக்க முடியாது. அவர் அதில் இருப்பது மாத்திரமல்ல அவர் அதில் ஒரு பாகமாகவும் முழுமையாகவும் அதில் இருக்கிறார். அதனை ஊர்ஜிதம் செய்யும்படியாகத் தொடர்ச்சியாக கவனித்துக்கொண்டேயிருக்கிறார். ஏன் ?

ஒரு வார்த்தையாகிலும் ஒழிந்து போகாதிருக்கச் செய்ய ''தேவனிடத்திலிருந்து புறப்படும் வார்த்தை ஒன்றும் அதிகாரமில்லாதிருக்காது'' என்று தேவதூதன் சொன்னான். (சென்றிநெறி மொழி பெயர்ப்பு லூக் 1:37)

அல்லது ''தேவனிடத்திலிருந்து உண்டாகும் வாக்குத்தத்தங்களில் ஒன்றும் நிறைவேறாமல் இருக்க முடியாது'' என்று வேமத்மொழி பெயர்ப்பில் கூறியிருக்கிறது.

ஒரு சுரங்கக் தொழிலாளி மலையிலுள்ள தனது குடிசையில் சாகும் தருவாயிலிருந்தான். ''தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்

படிக்கு அவரைத்தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'' என்று யோவான் 3:16 ல் சொல்லியிருப்பதை ஓர் கிறிஸ்தவப்பெண் அவனுக்கு வாசித்துக் காட்டினுள்.

அந்த சுரங்கத் தொழிலாளி தன்னுடைய கண்களைத் திறந்து அந்த ஸ்திரீயை நோக்கி ''அது வேதத்தில் இருக்கிறதா'' என்று கேட்டான்.

''ஆம்,'' என்று அவள் சொன்னுள். ''அப்படியானல் அது எனக்கும் உரியதா?''

''நிச்சயமாக, அது உனக்கும் உரியதுதான்'' என்று அவள் உறுதி கூறினுள்.

அவன் படுத்த படுக்கையாகவே சற்று நேரம் யோசிக்கலானுன். ''அந்த புத்தகத்தில் வேறு ஏதேனும் தேவன் எனக்குச் சொல்லியிருக்கிருரா?'' என்று அவன் கேட்டான்.

அவரை ஏற்றுக்கொள்கிற அத்தனைபேரும் அவருடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்'' என்று யோவான் 1:12 ல் சொல்லியிருப்பதை வாசித்துக்காட்டினுள். அதன் பின்பு ''அவர் உன்னேடு பேசுகிருர்'' என்று அவள் மெல்லிய குரலில் உரைத்தாள்.

வயது சென்ற அந்த மனிதன் தன்னுடைய கண்களைத் திறந்து ''நான் அவரை ஏற்றுக்கொள்கிறேன்-நான் திருப்தியடைந்துள்ளேன்'' என்று தாழ்ந்த குரலில் உரைத்து இம்மையை விட்டுக் கடந்து சென்ருன்

கிறிஸ்து தாமே தன்னுடைய சிறிய குடிசைக்கு நேரில் வந்து இந்த நித்திய ஜீவனைப்பற்றிய தூதைத்தனக்கு நேரில் பேசுகிருர் என்று எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை எண்ணி அதனை ஏற்றுக்கொண்டான். அதன் பயனுக ஆச்சரியமாக இரட்சிப்பு அடைந்தான். பரிபூரண சமாதானத்தோடு மறுமைக்குள் பிரவேசித்தான்.

வேதாகமத்தில் நீ வாசிக்கிற வாக்குத்தத்தங்கள் எல்லாம் தேவன் உனக்காகவே பேசுகிறவைகளாகும். ஒரு செக் எவ்விதமாக உன்னுடைய பெயரில் எழுதப்படுகிறதோ அதுபோலவே அவைகளும் உன்னுடையதாகும்.

அந்த செக் உன்னுடையதானபடியால் அதை வங்கியில் (பேங்க்) நீ மாற்றலாம். அதுபோலவே இந்த வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் ஜெபத்தின் மூலமாய் நீ உனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம். ஏனெனில் அவைகள் உன்னுடையவைகளே.

இன்றைக்கும் அற்புதசுகம் அளிப்பது கிறிஸ்துவின் ஊழியத்தில் ஒரு அம்சம் என்று அறிந்தபின் சுகம் அளிப்பதான வேதத்திலுள்ள அவருடைய வாக்குத்தத்தங்கள் உனக்காகத்தானே உண்டு பண்ணப் பட்டிருக்கின்றன என்பதை அறிந்து கொள்வாயாக.

இருபது வருடங்களாக ஒரு காது கேளாத ஒரு மனிதன் ஜெபிக்கும்படியாக என்னிடத்தில் வந்தான். ''தேவன் உன்னுடைய காதைச் சொஸ்தப்படுத்தக்கூடும் என்பதை விசுவாசிக்கிறுயா?'' என்று அவனைக் கேட்டேன். அவன் அதற்குப் பிரதியுத்தரமாக, ''எனக்குத் தெரியாது'' என்றான்.

''தேவன் உன்னைச் சொஸ்தப்படுத்த வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார் என்பது உனக்குத் தெரியுமா?'' என்று அவனைக் கேட்டேன்.

''இல்லை எனக்குத்தெரியாது'' என்று பதில் உரைத்தான்.

''தேவன் தாமே கொடுத்திருக்கிற தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வல்லவரும் நல்லவரும் என்பதை நீ விசுவாசிக்கிறுயா?''

''ஆம் ஐயா, அப்படியே விசுவாசிக்கிறேன்'' என்றான்.

"தேவன் தாமே சுகப்படுத்துவேன் என்று வாக்குக் கொடுத்திருக்கிறதை வேதாகமத்திலிருந்து நான் உனக்குக் காட்டினல் நீ விசுவாசிப்பாயா ?'' என்றேன்.

''ஆம் அப்படியே'' என்ருன்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களை எடுத்துரைத்து அவனுக்கு சுட்டிக்காட்டினேன்.

"நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்'' (யாத் 15:26) உன் என்பது யார் ?

"அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமானீர்கள்'' (1 பேது 2:24). நீங்கள் என்பது யாரைக்குறிக்கிறது ?

"அவர் உன் நோய்களை எல்லாம் குணமாக்கி'' (சங் 103:3). இதில் உன் என்பது யார் ?

"இப்போது நான் விசுவாசிக்கிறேன்'' என்று கூறி அந்த மனிதன் அழ ஆரம்பித்தான். "தேவன் என்னைச் சுகப்படுத்த வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறதை நான் காண்கிறேன்'' என்ருன். ''அவர் அப்படியே செய்வார் என்பதையும் நம்புகிறேன்'' என்ருன்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் குறித்து கேள்விப்பட்டதினல் அம்மனிதனுக்கு விசுவாசம் வந்தது. "விசுவாசம் கேள்வியினல் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினல் வரும்'' (ரோமர் 10:17)

நான் அவனுடைய காதை இயேசுவின் நாமத்தில் தொட்டு அவருடைய வாக்குத்தத்தத்தின்படி அதைத் திறக்கும்படியாகக் கேட்டேன். அவன் அப்பொழுதே குணமடைந்தான்.

அந்த மனிதனுக்கு தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எவ்விதம் இருந்ததோ அவ்விதமே அவை உனக்கும் உரியவை.

''நீங்கள் என் நாமத்தினுல் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்'' (யோவா 14:14). ''எதை'' என்பது சுகமாக்கப் படுதலேயும் ''நீங்கள்'' என்பது உன்னே யும் குறிக்கிறது,

''உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் .... கர்த்தர் அவனே எழுப்புவார்'' (யாக், 5:14, 15)

"உங்களில் ஒருவன்" என்பது உன்னேயும் குறிக்கிறது.

''கர்த்தர் அவனே எழுப்புவார்'' என்னும் வாக்குத் தத்தம் விதி விலக்குடையதல்ல.

"விசுவாசிக்கிறவர்களால் ஆகும்........ வியாதியஸ்தர் மேல் கைகளே வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்'' (மாற் 16 : 17, 18), ''அவர்கள் சொஸ்தமாவார்கள்'' என்னும் கிறிஸ்துவின் வாக்குத் தத்தம் வியாதிப்பட்ட யாவருக்கும் விலக்கு விதியின்றி கூறப்பட்டிருக்கிறது.

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உனக்கு உரியவை என்பதை விசுவாசிக்கிருயா? அப்படியானுல் உண்மையான ஜெபத்தோடு அதை உனக்குச் சொந்தமாக்கிக்கொள். தேவன் அவைகளே நிறைவேறச் செய்வார். சந்தேகிக்காதே. அவருடைய வார்த்தையை விசுவாசி. அவர் தனித்து உன்னேடு பேசுகிருர் என்பதாக எண்ணிக்கொள்.

3 கொலை பாதகன்

சாத்தான் நீ அவதிப்பட வேண்டும் என்றும் தேவனோ நீ நன்ருக இருக்க வேண்டுமென்றும் விரும்புகிருர் என்பதை அறிந்து கொள்வதே கிறிஸ்துவிலிருந்து உண்டாகும் அற்புத சுகத்தின் மூன்ரும் படியாகும்.

அநேகர் வியாதியுற்று அவஸ்தைப்படுவதில் ஏதோ தேவனுடைய நோக்கமிருக்கிறது என்று எண்ணுவதிஞல், அற்புத சுகம் அடைய கிறிஸ்துவை விசுவாசத்தோடு தேடாது தடை செய்யப்பட்டிருக்கிருர்கள்.

இந்த வியாதியை தேவன் தாமே உண்டுபண்ணி யிருக்கிருர் என்றும் அதைப் பொறுமையோடே சகிக்க வேண்டும் என்றும் அதினின்று சுகமடைய பிரயாசைப்படக் கூடாது என்றும் நினைக்கின்றனர்.

இப்படிப்பட்ட எண்ணங்களிஞல் ஆயிரக்கணக்கான நல்ல ஜனங்கள் அனுவசியமாக வருஷக்கணக்காக அவஸ்தைப் பட்டு இளமையிலேயே மரித்துப் போகிருர்கள்.

இவைகளை நாம் தெளிவாக நம் மனதில் அறிந்து கொள்வதற்கு வியாதி சாத்தாஞல் மாத்திரமே உண்டா

இறது. தேவனால் அல்ல என்பதை திட்டவட்டமாக அறிந்து கொள்ள வேண்டும். சாத்தான்தான் நம்மேல் வியாதியைக் கொண்டு வருகிறானேயன்றி தேவன் அல்ல.

வியாதி பிசாசால் வருகிறது என்பதை யாராகிலும் சொல்லுவதற்கு 7 வருஷங்களுக்கு முன்னதாகவே நான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தேன். அதன் பின்பு இந்த வாசகம் என்னுடைய சிந்தனையைத்தட்டி எழுப்பிற்று.

பின்பு இதைக் குறித்த வேத வசனங்களைத் தேடலானேன். இதற்கு முன் நான் ஒருக்காலும் பிரசங்கித்திராத சில உண்மைகளைக் கண்டுபிடித்தேன்.

யோபு 2:7ல் என்னுடைய கவனத்தை இழுத்துக் கொண்டது. ''அப்பொழுது சாத்தான் .... கொடிய பருக்களால் அவனை வாதித்தான்.'' இங்கு வியாதி சாத்தானால் நேரடியாக யோபுக்குக் கொண்டு வரப்பட்டதைக் காண்கிறோம்.

கூனியான ஸ்திரீயைப் பார்த்து இயேசு இவ்விதம் சொன்னதை அறிந்தேன். அதாவது ''சாத்தான் இவளைக் கட்டியிருக்கிறான்.'' எனவே இவளைப் பெலவீனப்படுத்தும் ஆவி இவளில் இருந்தது என்பதைப் பார்க்கிறோம்.
(லூக். 13:11-16)

மத்தேயு 12:22 ல் சொல்லியிருக்கிற பிரகாரம் பிசாசினால் அவன் குருடனாயிருந்தான் என்பதை நினைவு கூர்ந்தேன். இயேசு அந்த பிசாசைத் துரத்தினபோது குருடனான அந்த மனிதன் பார்வை அடைந்தான்.

ஊமையும் செவிடுமான ஆவியினால் வலிப்புற்றிருந்த ஒரு பையனிலுள்ள பிசாசை இயேசு துரத்தினபொழுது அவன் பரிபூரண சுகம் அடைந்தான் என்று (மாற். 9:25)ல் சொல்லியிருப்பது என் ஞாபகத்திற்கு வந்தது.

எத்தனேயோ பேர் கண்டும் காணுமலும் விட்டுவிட்ட அதிமுக்கியமான வசனமாகிய அப்போஸ்தலர் 10:38 ல் அதைக்கண்டேன். ''பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராய் இயேசு சுற்றித்திரிந்தார்.'

இந்த வேதவசனமானது கிறிஸ்து சுகப்படுத்தின வியாதியஸ்தர்கள் பிசாசின் வல்லமையில் அகப்பட்டவர்களா யிருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

என்னுடைய ஜீவியத்திலேயே நான் ஒருக்காலும் கேள்விப்பட்டிராத வண்ணம் அற்புத சுகத்தைப்பற்றிய விளக்கத்தை வில்லியம் பிரான்ஹேம் என்னும் சுவிசேஷகன் கூறக்கேட்டேன்.

அது அவ்வளவு நியாயமாகவும் அற்புத சுகம் அளிக் கும் ஊழியத்தை அவ்வளவு தெளிவாக நான் விளக்கிக் கொள்ளக்கூடிய முறையில் எனக்கு உதவி அளித்ததோடு என்னுடைய முழு ஜீவியமும் ஊழியமும் சில மணி நேரத்தில் மாற்றி அமைக்கப்படக் கூடியதாயிருந்தது.

தெய்வீக சுகம் என்பது இதற்கு முன்பு எனக்கு ஓர் மர்மம் போல இருந்தது. வியாதியில் சாத்தானு டைய பங்குபற்றிக் கீழ்க்காணுமாறு அவர் விளக்கினர்.

''ஒவ்வொரு வியாதிக்கும் ஜீவனுண்டு. அதாவது கிருமி. அது சாத்தானிலிருந்து உண்டாகுகிறபடியினல் அழிவை உண்டுபண்ணுகிறது. அதைத்தான் இயேசு ''பெல வீனப்படுத்தும் ஆவி'' என்ருர்.

நம்முடைய கருவில் ஜீவ கிருமி உண்டாகி நம்மு டைய சரீரத்தை அது எவ்விதம் வளரச் செய்கிறதோ அதுபோலவே அந்த கிருமி வியாதியை வளரச்செய்கிறது.

அந்த கிருமியோ அல்லது ஜீவனே நம்முடைய சரீரத்தை விட்டு அகலும்பொழுது நம்முடைய சரீரம் மரணத்திற்குள் ஆகுகிறது. அது அழுகி புழுதிக்குத் திரும் புகிறது.

அதுபோல வியாதியை உண்டுபண்ணுகிற ஆவி அகன்றபோது வியாதி மரிக்கிறது. அது மரித்து அழுகி காணப்படாமல் போகிறது.

வியாதியைக்கொண்டு வருகிற பிசாசின் ஆவியின் மேல் நமக்கு அதிகாரமுண்டு. ஏனெனில் ''என்னுடைய நாமத்திலே பிசாசுகளைத் துரத்துவீர்கள்'' என்று இயேசு சொன்னார்.

அவருடைய நாமத்தினாலே வியாதியை உண்டுபண்ணுகிற ஜீவனை அகலும்படி கட்டளையிட நமக்கு பூரண அதிகாரமுண்டு. அது நமக்குக் கீழ்ப்படியத்தான் வேண்டும். அது அகலும்போது வியாதி மரிக்கிறது. அதன் பலனும் மறைந்து போகிறது.

''உதாரணமாகப் பிளவை அதில் ஜீவனுண்டு. அந்த ஜீவன் பிசாசினால் உண்டானது. ஏனெனில் அது கொலை செய்து அழிக்கிறது. அந்த ஜீவன் அதில் இருக்கும் வரை அந்தப் பிளவையானது அழிவின் வேலையைச் செய்து கொண்டேயிருக்கும்.

ஆனால் இயேசுவின் நாமத்தினால் அந்தப் பிளவையின் ஜீவன் அகன்று போகும்படி கட்டளையிடும்பொழுது அது அகன்று போகவேண்டும். அப்பொழுது பிளவை மரிக்கிறது. அது அழுகி மாய்ந்து போம். வியாதிக்காரனோ சுகம் அடைவான்.''

சகோதரன் பிரான்ஹேம் இதை விளக்குகிறதை நான் கேட்டபொழுது அற்புத சுகமளிக்கும் ஊழியத்தைப் பற்றிய எல்லா நிலைமையும் என்னில் மாறினது.

அதன் பின்பு நான் வியாதியஸ்தருக்கு ஜெபிக்கக்கூடும் என்பதை அறியலானேன். வியாதியை உண்டுபண்ணுகிற ஆவியை இயேசுவின் நாமத்தினால் நான் கடிந்துகொண்டு அதை அகற்ற முடியும் என்பதை உணர்ந்தேன்.

அவர்களுடைய வியாதி செத்து அவர்கள் திரும்பவும் சுகமடைய முடியும் என்பதைக் குறித்து இயேசு சொன்னதை அறியலானேன். ''என்னுடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள் .... வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அவர்கள் சுகமடைவார்கள்.''

வியாதியஸ்தர் எங்களுடைய கூட்டங்களுக்கு வரும்படி அழைப்பு கொடுக்க ஆரம்பித்தோம். நாங்கள் அவர்களுக்காக ஜெபித்தோம். இயேசுவின் நாமத்தில் பெலவீனப்படுத்தும் ஆவிகள் வியாதியஸ்தரிலிருந்து அகலும்படி கட்டளையிட்டுக்கடிந்து கொண்டோம்.

வியாதிகள் மரித்தன. வியாதிப்பட்டோர் சுகமடைந்தனர். கிறிஸ்து தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார்.

வியாதியஸ்தர்கள் சுகமடைந்ததின் மூலம் தேவன் மகிமைப்பட்டது மாத்திரமல்ல, அநேக, ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டதின் நிமித்தமும் அவர் மகிமைப்பட்டார்.

கிறிஸ்துவை அற்புதமளிக்கிறவராகப் பிரசங்கிப்பதற்கு முன்பு ஏழு வருஷங்களில் செய்த எங்களுடைய ஊழியத்தை, கிறிஸ்துவை அற்புத சுகமளிக்கிறவராக எங்களுடைய சுவிசேஷ தூதின் ஒரு பாகமாக சேர்த்துக் கொண்டு பிரசங்கித்த ஒரே நாளில் எத்தனையோ முறை அதிக ஆத்துமாக்களை கிறிஸ்துவண்டை வழி நடத்தியிருக்கிறோம்.

ஒரு மனிதனுடைய கண்ணில் பூ விழும்படியாகச் செய்த குருட்டு ஆவியை நாங்கள் கடிந்து கொண்டோம். குருட்டு ஆவி அவனை விட்டு அகன்றது. கண்ணிலிருந்து பூ செத்தது.

சில நாட்களில் கண்ணில் வளர்ந்த அந்த வெள்ளைச் சதை மறைந்தது. குருடனான அந்த மனிதன் திரும்பவும் பார்வையடைந்தான். அவனுக்குச் சரியான பார்வை கிடைத்தது.

ஒரு மனிதனுடைய காதைச் செவிடாக்கின செவிட்டு ஆவியை இயேசுவின் நாமத்தினாலே கடிந்து கொண்டோம். செவிடன் உடனே கேட்கும் சக்தி பெற்றான்.

ஒரு ஸ்திரீக்கு பிளவையை உண்டுபண்ணின பிளவையின் ஜீவன் அவளை விட்டு நீங்கும்படி கட்டளையிட்டோம். பிளவை செத்தது. வியாதிப்பட்டுள்ள அந்த ஸ்திரீ சுகமடைந்தாள்.

இயேசு வியாதியஸ்தர்கள் எவ்விதம் சுகமடைவார்கள் என்று வாக்குக் கொடுத்தாரோ அப்படியே சுகமடைந்தார்கள். ''நான் வியாதிக்காக ஜெபிக்கப்பட்டேன். இப்பொழுது சுகமடைந்திருக்கிறேன்!'' எனக்கு ஒரு வகைக் கட்டியிருந்தது அது இப்பொழுது மறைந்துவிட்டது!'' ''எனக்கிருந்த புற்றுநோய் மறைந்துபோனது!'' முதலிய அறிக்கைகள் சீக்கிரத்தில் வர ஆரம்பித்தன.

எங்களுடைய சபையில் எழுப்புதல் ஆரம்பித்து எங்களைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான மைல் பரவ ஆரம்பித்தது. வேதாகமத்தில் சொல்லியிருக்கிற முறையின்படி நாங்கள் வியாதியஸ்தருக்குச் செய்யவேண்டிய ஊழியத்தைச் செய்ய ஆரம்பித்தோம்.

''கிறிஸ்து அவர்களுடனே கூட கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்.'' (மாற். 16:20) அதிலிருந்து எங்களுடைய ஜீவியமே மாறிவிட்டது.

அது எத்தனையோ வருடங்களாக இப்பொழுது எங்களுடைய ஜீவியத்தில் கிரியை செய்து வருகிறது.

அவரைப் பின்பற்றுகிறவர்களாய், அவர் எங்களுக்குக் கொடுத்திருக்கிற அதிகாரம், வல்லமை இவைகளை அவர் சொன்ன பிரகாரம் செய்கிறவர்களாய் பிசாசின் மேலும்,

வியாதியின் மேலும், வியாதியை உண்டுபண்ணுகிற பிசாசைக்கடிந்து கொள்ளுகிறவர்களாய் வியாதியஸ்தரின் சரீரத்தை அவஸ்தைப்படுத்தாத வண்ணம் அதைவிட்டு ஓடும்படியாக கட்டளை இடுகிறவர்களாய், அநேக வியாதியஸ்தர்களைச் சுகப்படுத்துகிறவர்களாய்த் தொண்டு செய்து வருகிறோம்.

நாங்கள் நடத்துகிற ஒவ்வொரு சுவிசேஷ பிரபல்லியக் கூட்டங்களிலும் ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் சுவிசேஷத்தை ஒப்புக்கொண்டு கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

இவைகளை நாங்கள் பெருமை பாராட்டிக் கொள்ளுவதற்காகச் சொல்லவில்லை. ஆனால் ஆதிச்சபையில் அந்நாட்களில் எவ்விதம் நடந்ததோ, அவ்விதமே கிறிஸ்துவின் அற்புத சுகமளிக்கும் வல்லமை வெளிப்பட்டு, இந்நாட்களிலும் வியாதியஸ்தர் சுகமடைகிறார்கள்.

ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்பதைக் காட்டவே ''திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடம் அதிகமதிகமாய் சேர்க்கப்பட்டார்கள்.'' (அப். 5:14) ''வியாதியஸ்தரைப் படுக்கைகளிலும் கட்டில்களிலும் கிடத்தி தெருக்களில் வைத்தார்கள். அவர்கள் யாவரும் சுகமடைந்தார்கள்.'' (அப். 5:15,16) என்று பார்க்கிறோம்.

உன்னுடைய வியாதி தேவனால் உண்டானதென்று நீ நினைக்கும் வரை, நீ அதைக் கடிந்து கொள்ளப் போவதேயில்லை. உன்னுடைய வியாதியை ஏதோ ஒரு காரணத்தின் நிமித்தம் தேவன் உனக்குக் கொடுத்திருக்கிறார் என்று நீ நினைக்கும்வரை, நீ அதை எதிர்க்கப் போவதும் இல்லை.

வியாதிகள் சாத்தானால் உண்டாகிறது என்பதை வேதம் தெளிவாகக் கூறுகிறதின் மூலம் நீ அறிகிறபொழுது,

நீ அவைகளுக்கு எதிர்த்து நிற்பாய், அவைகளைக் கடிந்து கொள்வாய். அவைகள் நீ ஜெபிக்க ஆரம்பிப்பதற்கு முன் னதாகவே அழிந்து ஒழிந்துபோம்.

கால்களையும் கரங்களையும் மடக்கமுடியாமற் செய்கிற வியாதியை டாக்டர்கள் ''அர்த்ரிட்டீஸ்'' அல்லது ''நிமிர் வாதம்'' என்று கூறக்கூடும். ஆனால் குருட்டாட்டத்தை உண்டு பண்ணும் பிசாசின் ஆவியே இதன் உண்மை காரண மாகும்.

செவிடாய்ப் போகிறதை மருத்துவ முறையின்படி ''காதுகளின் செத்த நரம்புகள்'' என்று ஒரு வேளை சொல் வார்கள். ஆனால் உண்மையில் அது செவிட்டு ஆவியே.

பேசக்கூடாத ஒரு வாலிபனுடைய நிலைமையைக் குறித்து விஞ்ஞான முறைப்படி ''வளர்ச்சி அடையாத சப்த நரம்புகள்'' என்று ஒரு வேளை கண்டுபிடித்துச் சொல் வார்கள். ஆனால் அதைச் செவிட்டு ஆவி என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது.

''குறுக்கோமா'' ''பூ'' விழுகிறது தான் ஓர் மனிதன் குருடாவதற்குக் காரணம் என்று பாண்டித்தியம் பெற்ற விஞ்ஞானிகள் கூறக்கூடும். ஆனால் இயேசுவோ அதைக் குருட்டுப்பிசாசு என்று அழைக்கிறார்.

முற்றிலும் குருடான ஒரு ஸ்திரீயை ஜெபிப்பதற்காக எங்களிடத்தில் கொண்டுவந்தார்கள். டாக்டர்கள் அவளைப் பார்த்துவிட்டு, இவளுடைய கண்ணின் நரம்பெல்லாம் செத்துவிட்டன என்று சொன்னார்கள்.

வைத்திய பிரகாரம் அவர்கள் சொன்னது சரியே. 15 வருடக்காலங்களாக முற்றிலும் குருடான இந்த ஸ்திரீயை ஓர் அழகிய நாய் அங்குமிங்குமாகக் கூட்டிக் கொண்டு திரிந்தது.

அவளுடைய கண்களைக் கெடுத்துக் கொண்டிருந்த துருட்டுப்பிசாசை நாங்கள் அதட்டினோம். அது உடனே அவளை விட்டுப்புறப்பட்டது.

அந்த ஸ்திரீ சந்தோஷத்தினால் பொங்கிச் சத்தமிட்டு "ஓ நான் இப்பொழுது காண்கிறேன். எனக்குச் சுகம் கிடைத்துவிட்டது!" என்றாள். அவளுக்கு இவ்விதம் உடனே பார்வை கிடைத்தது.

கிங்ஸ்டன் ஜமேக்காவில் வேதா மெகக்கன்ஸி என்பவள் மூன்று ஸ்திரீகளால் ஓர் பழைய கைவண்டியில் வைத்து எங்களுடைய கூட்டத்திற்குத் தள்ளிக்கொண்டு வரப்பட்டாள்.

அதிகமான இரத்தம் மூளையில் உறைந்து போனபடியால் அவளுக்குப் பாரிசவாயு உண்டாகிவிட்டது என்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள்.

நான்கு நாட்களாக இரவும் பகலும் தண்ணீர் குடியாமலும் ஆகாரம் சாப்பிடாமலும் ஜீவன் அற்றவள் போல் படுத்திருந்தாள். கண்கள் சொருகிவிட்டன. சரீரமும் செத்த சரீரம்போல் ஆகிவிட்டது. இருதயம் மாத்திரம் இலேசாகத் துடித்துக்கொண்டிருந்தது.

நாங்கள் அவளைக்கட்டியிருந்த பிசாசு அவளை விட்டு விடவும், அவளை விட்டு ஓடிப்போகவும், கட்டளையிட்டுக் கடிந்து கொண்டோம். அதன் பின்பு உரத்த குரலில் நான் அவளைப்பார்த்து "வேதா உன் கண்களைத்திற. இயேசுவின் நாமத்தினாலே நீ சொஸ்தமாயிரு" என்றேன்.

அவள் உடனே சுகமடைந்தாள். சில நிமிடங்களில் அவள் எழுந்து நடந்தாள். நல்ல சுகதேகியாக வீட்டிற்கு நடந்து சென்றாள்.

ஜமேக்காவிலுள்ள நூற்றுக்கணக்கான ஜனங்கள் வேதா அற்புத சுகமடைந்ததை கேள்வியுற்றார்கள். அவளைக்

கொன்று அவனுடைய ஜீவனை அழிப்பதற்காகச் சாத்தானால் அனுப்பப்பட்ட பிசாசுதான் அவனுடைய வியாதிக்குக் காரணம். ஆனால் தேவன் அவனைச் சுகப்படுத்தினார். அவருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

எங்களுடைய சொந்த ஊழியத்தில் சம்பவித்த நூற்றுக்கணக்கான இப்படிப்பட்ட அற்புதங்களை நான் எழுதலாம். ஆயினும் நான் வேண்டிய அளவு கூறியிருக்கிறேன் என்று நம்புகிறேன்.

வேத அத்தாட்சியைக் கொண்டு வியாதி சாத்தானாலும், பெலவீனப்படுத்தும் ஆவியினாலும் வருகிறது என்பதை ரூபித்துச் சந்தேகமுள்ளவர்களுக்கு விளக்கியுள்ளோம்.

இயேசு தாமே வாக்குத்தத்தம் செய்கிறபடியே இயேசுவின் நாமத்தில் இந்த ஆவிகளைத் துரத்துகிற பொழுது வியாதியஸ்தர் இன்றும் சுகமடைகிறார்கள்.

பண்ணைகளில் உள்ள மரங்களை வெட்டும் முன் மரத்தின் அடிப்பாகத்தை ஆழமாக வெட்டி குழிகளை உண்டு பண்ணுவோம். அப்படிப்பட்ட மரங்களின் இலைகள் உடனே உதிராவிட்டாலும் அந்த மரத்திற்குச் சரியான வேலை செய்துவிட்டோம், அது பட்டு விடும் என்று நினைப்போம். அது அப்படியே ஆகும். வியாதியின் விஷயத்திலும் அப்படியே.

இயேசு எல்லா வியாதிகள் மேலும் நமக்கு அதிகாரத்தையும் வல்லமையையும் கொடுத்திருக்கிறார். அவருடைய நாமத்திலே விசுவாசிகள் அவைகளைக்கடிந்து கொள்ள அவர்களுக்கு அதிகாரமுண்டு. அவைகள் நிச்சயம் சாகும்.

ஒரு வேளை அந்தமரத்தின் இலைகள் போன்ற வியாதியின் சில அடையாளங்கள் உடன் தானே மறைந்து போகாதிருக்கலாம்.

ஆனல் நாம் விசுவாசத்தோடு ஜெபிக்கிற போதும் வியாதியின் ஜீவனைக் கடிந்து கொள்ளுகிற பொழுதும் அந்த வியாதியானது வேரோடு அழிந்துபோய் விட்டது என்று அறிகிறோம். அப்படியே வெளியான வியாதியின் அடையாளங்களும் மறைந்து போகிறது.

மாற்கு 11:12-14-ல் கனிகொடாத ஓர் காட்டத்தி மரத்தை இயேசு சபிக்கிறதைக் குறித்து நாம் வாசிக்கிறோம். "இது முதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக் கடவன்" என்று இயேசு அம்மரத்தைப் பார்த்துச் சொன்னார், அந்த நிமிஷத்திலேயே அந்த மரத்தின் ஜீவன் அழிந்தது என்றும், அதன் இலைகளும் பட்டுப் போம் என்றும் அவர் அறிந்திருந்தார்.

மாற். 11:20-24. "மறுநாள் காலையிலே அவர்கள் அவ்வழியாய்ப் போகும்போது அந்த அத்திமரம் வேரோடே பட்டுப் போயிருப்பதைக் கண்டார்கள்.

பேதுரு நினைவு கூர்ந்து, அவரை நோக்கி, ரபி! இதோ நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்றான்." அவன் ஆச்சரியப்பட்டான்.

இயேசு மாறுத்தரமாக "தேவனிடத்தில் விசுவாசமாயிரு" என்றார். அந்தமரம் பட்டுப்போவதை எதிர்பார்த்தார்.

வியாதி சம்பந்தப்பட்டவரை சாத்தானின் வேலையைத் தெளிவாக அறிந்துகொண்டு அவன்தான் இதை உண்டு பண்ணியிருக்கிறான் என்றும் பெலவீனப்படுத்தும் ஆவிதான் ஜீவனாக இருக்கிறது என்றும் தெரிந்துகொண்டால் இந்த பெலவீனப்படுத்தும் ஆவியைக் கடிந்துகொண்டு அது வியாதியஸ்தனை விட்டு விடும்படி இயேசுவின் நாமத்தில் கட்டளை இடலாம்.

அத்துடன் வியாதி செத்துப்போனது என்பதையு நிச்சயம் அறிந்து கொள்ளலாம். பச்சை இலைகள் (அதாவ வியாதியின் வெளியான அடையாளங்கள்) உடனே பட்டு போகாததினுல் நாம் சந்தேகிப்பதில்லை. ஆயினும் அத ஜீவன் அற்றுப்போயிற்று என்பதையும் நாம் அறிந்து வி வாசித்து களிகூருகிறோம்.

இவைகளை அறிந்ததின் மூலமாக தேவன் நீ சு தேகியாக இருக்கவேண்டும் என்பதை விரும்புகிருர் என்று சாத்தான் மாத்திரமே நீ அவஸ்தைப்படவேண்டும் என்பதை விரும்புகிருன் என்றும் தெரிந்து கொண்டோம்.

4 நிபந்தனை

தெய்வீக சுகம் என்பது இரட்சிப்பின் ஒரு பாகம் என்று அறிந்து கொள்ளுவதே கிறிஸ்துவிலிருந்துண்டாகும் அற்புத சுகத்தின் நான்காவது படியாகும்.

சுகம் அளிக்கிறவரை இரட்சகரிலிருந்து வேறு பிரிக்க முடியாது. அதுபோலவே தெய்வீகசுகத்தை இரட்சிப்பிலிருந்து பிரிக்க முடியாது.

உன்னுடைய சரீரத்திற்கு சுகம் வேண்டுமானால் நீ உன்னுடைய ஆத்துமாவிற்கு சுகம் பெற வாஞ்சையுள்ளவனாயிருக்க வேண்டும்.

உனக்குச் சுகம் வேண்டுமானால் சுகம் அளிக்கிறவரை உன்னுடைய ஜீவியத்தில் வர அனுமதிக்கவேண்டும். மரிக்கும் தருவாயிலிருக்கிற உனக்கு அருமையானவர்களைச் சுகப்படுத்தும்படி டாக்டரை கூப்பிட்டுவிட்டு அவர் வந்த பின் அவரை வீட்டிற்குள் அனுமதியாது இருக்கமாட்டாய்.

உன்னுடைய அறையிலுள்ள தண்ணீர் குழாயைப் பழுது பார்ப்பதற்கு ஆளைக் கூப்பிட்டுவிட்டு அவன் வந்த

பின் அவனே வீட்டிற்குள் பிரவேசித்து வேலை செய்
விடாதிருக்க மாட்டாய்.

எனவே கிறிஸ்துவின் அற்புத சுகத்தை நாடுகிற
அவர் தாமே வந்து உன்னுடைய ஜீவியத்திற்குள் பிரவே
சிக்க அனுமதிக்க வேண்டும்.

சகலவிதமான வியாதிகளையுள்ளவர்களும் சரீரபலவீ
முள்ளவர்களும் ஆயிரக் கணக்கில் அற்புதசுகம் அடைந்தை
நாங்கள் கண்டு களித்திருக்கிறோம்.

வியாதியஸ்தர்களுக்கு, வியாதியுள்ள அவர்களுடை
சரீரங்களுக்காக ஜெபிப்பதற்கு முன், இயேசு கிறிஸ்துவே
அவர்களுடைய ஆத்துமாவை குணப்படுத்துகிறவரா
ஏற்றுக் கொள்ளும்படியான தருணத்தைக் கொடு
திருக்கிறோம்.

அற்புத சுகமளிப்பவரை அவர்களுடைய ஜீவியத்தி
ஏற்றுக்கொண்ட பின், அவர்களுடைய சரீரத்திற்கா
சுகத்தை அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடும்.

மாபெரும் பாவியான ஒருமனுஷன் மூன்று வார
காலமாக எங்களுடைய கூட்டத்திற்கு வந்து கொண்டிரு
தான். அவன் வந்த ஒவ்வொரு கூட்டத்திலும் சுகமடை
வதற்கான ஜெபத்தைத் திரும்பவும், திரும்பவும் செய்
வந்தான்.

ஆனால் சுகம் கிடைக்கவில்லை. அவன் சுகம்பெ
விரும்பினான். ஆனால் சுகம் கொடுக்கிறவரை விரும்பவில்லை

மூன்று வாரங்களுக்குப்பின் தேவனுடைய வார்த்
அவனுடைய பாவத்தைக் குறித்தும் கிறிஸ்து அவனுக்
வேண்டும் என்பதைக் குறித்தும் அவனுக்கு உணர்த்தின

"இயேசு கிறிஸ்துவை என்னுடைய இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ள தீர்மானம் செய்தேன்· அவர் என் ஜீவியத்தில் வர அவரை அழைத்தேன். அவர் என்னுடைய எல்லா பாவங்களினின்றும் என்னைச் சுத்திகரித்தார் என்முன்.

இரட்சிப்புக்கான ஜெபம் செய்தபின் பாவங்களைப் பரிகரித்த அதே கிறிஸ்து இப்பொழுது வியாதிகளையும் பரிகரிப்பார் என்று சகோதரன் ஆஸ்போர்ன் சொல்லக் கேட்டேன். ஆகவே திடீரென அவர் என்னைச் சுகப்படுத்தி விட்டார் என்பதையும் உணரலானேன்'' என்று அவன் சாட்சி கொடுத்தான்.

அற்புத சுகம் பெறும்படியாக மூன்று வாரங்கள் ஜெபித்த இதே மனிதனிருந்தான். அவன் சுகப்படுத்துகிற வரை அல்லத்தட்டின படியினுல் அவனுக்குச் சுகம் கிடைக்க வில்லை.

கடைசியாக இயேசுவைத் தன்னுடைய ஆண்டவரும், இரட்சகருமாக ஏற்றுக்கொள்ள தீர்மானித்த பொழுது அவன் கிறிஸ்துவினிடத்தில் கேட்பதற்கு முன்னதாகவே கிறிஸ்து அவனுடைய எல்லா வியாதிகளினின்றும் அவனைச் சுகப்படுத்தினுர்.

இதே காரியம் ஆயிரக்கணக்கான மக்களுக்கு நடந்திருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

மற்ருெரு மனிதன் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வந்தான். அவனுக்குக் குடல் நோயும் ஒரு காது செவிடுமாக இருந்தது. தன்னுடைய ஆத்துமாவை சொஸ்தப்படுத்தின தேவனையும் தன்னுடைய பாவங்களை மன்னித்து சொஸ்த மாக்குகிறவராகிய கிறிஸ்துவை அவன் ஸ்தோத்தரித்துக் கொண்டிருந்த பொழுதே அவன் அற்புத சுகத்திற்காகக் கேட்கும் முன்னரே முற்றிலுமாகச் சுகமடைந்தான்·

மத்திய அமெரிக்காவிலுள்ள முற்றிலும் குருடா
ஓர் வயதான மனிதன் தன் பாவங்களை விட்டு ம
திரும்பிக் கிறிஸ்துவைத் தன்னுடைய இருதயத்திலு
ஜீவியத்திலும் ஏற்றுக்கொண்ட உடனேயே அவனுடை
எல்லா குருட்டு நிலைமையும் மாறிப் பூரண பார்வை
யடைந்து சுகமளிக்கிறவராகிய கிறிஸ்துவும் அவனுடை
ஜீவியத்தில் பிரவேசிக்கப்பெற்றான்.

கிறிஸ்து அவனுக்குச் செய்ததைக் குறித்து அவ
சாட்சி சொன்ன பொழுது "இதோ கிறிஸ்து எனக்கு
வந்துவிட்டார், அவர் இதோ என் இருதயத்திற்குள் இ
கிறார். உங்களுடைய கையை இங்கே வையுங்கள். நீங்க
அவரை உணரக்கூடும். இதோ அவர் இங்கேயிருக்கிற
நான் இவை எல்லாவற்றையும் காண்கிறேன் என்று த
நெஞ்சை தட்டிக்கொண்டு கூறினான்.

தேவன் நம்முடைய ஜீவியத்தை ஆசீர்வதிப்பதி
அவருடைய ஒழுங்கு முறையாவது: "அவர் உன் அக்
மங்களை எல்லாம் மன்னித்து உன் நோய்களை எல்லா
குணமாக்கி" (சங். 103: 3) என்று சொல்லியிருக்கிற

பாவ மன்னிப்பு முதலாவது வருகிறது. அதன் பின்
உன்னுடைய வியாதிக்குச் சுகம்.

இயேசு திமிர்வாதக்காரனை நோக்கி முதலாவ
"மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டத
என்றார். பின்பு நீ எழுந்து உன் படுக்கையை எடுத்து
கொண்டு உன் வீட்டுக்குப்போ என்றார். (மார் 2:5,1
எனவே முதலாவது பாவ மன்னிப்பு, பின்னர் சு
பெறுதல்.

சுகமளிப்பதில் தேவனுடைய நிபந்தனையும் உட
படிக்கையும் என்னவெனில் "உன் தேவனாகிய கர்த்தரு

விப்பாயாக.......... என்று சொல்லிவிட்டு, பின்பு வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்'' (யாத் 23:25) என்பதாகும்.

சுகம் என்பது சுகமளிக்கிறவரிலிருந்து வருகிறது. அந்த சுகம் உள்ளேயிருந்து ஆரம்பிக்கிறது. அவரை ஏற்றுக்கொள். அவருடைய அற்புத சுகம் தானாகவே உண்டாகும்.

சுகமளிக்கிறவரைத் விட்டு, சுகத்தை மாத்திரம் ஒருக்காலும் பெற்றுக்கொள்ள முடியாது.

''நான் சுகமடையும்படி எனக்காக ஜெபிப்பீர்களா?'' என்று ஒரு மனிதன் என்னைக் கேட்டான்.

''நிச்சயமாக'' என்று பதிலுரைத்து, ''இயேசு கிறிஸ்துவை உன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதுண்டா ?'' என்று கேட்டேன்.

இல்லை ! என்று பதிலுரைத்தான்.

பின்பு, நீ அவருக்குச் சேவை செய்ய வாஞ்சையற்றவனாயிருக்கும் போது, அவர் உன்னைச் சுகப்படுத்தும் படி அவரை ஏன் கேட்கிறாய், சுகத்தையும் அதிகமான பெலத்தையும் பெற்று சாத்தானுக்கு இனிமேலும் சேவை செய்யவா ?

நீ தேவனுக்குச்சேவை செய்வாயாகில் அவர் உன்னுடைய சரீரத்தை சுகப்படுத்துவார் கிறிஸ்துவை உன்னுடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்ள மறுப்பதினால் அவருக்குச் சேவை செய்கிறதையும் நீ மறுக்கிறதாகும். அப்படியானால் அவர் உன் சரீரத்தைக் சுகப்படுத்த எதிர் பார்க்க வேண்டியதில்லை என்று கூறினேன்.

அந்த மனிதன் இவைகள் எல்லாவற்றையும் விவேகமாய்ச் சிந்தித்து ஒரு தீர்மானம் செய்தான். கிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த இரட்சகரும் ஆண்டவருமாய் ஏற்றுக்

கொண்டான். மனமகிழ்ச்சியோடு மனந்திரும்பலடை
தான். அக்கணமே சுகமுமடைந்தான்.

நீ ஒரு வேளை உன்னுடைய சரீரவியாதியினின்
சுகத்தை விரும்பலாம் என்ற போதிலும் இயேசு கிறிஸ்துவ
உன்னுடைய ஜீவியத்திலே ஏற்றுக்கொண்ட சந்தோ
அனுபவம் இல்லாதிருக்கலாம்.

அப்படியானால் இரட்சிக்கப்படுவதற்கு இது போன்
ஒரு நல்ல சமயம் வேறில்லை. ''இப்பொழுதே அநுகி
காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்'' (1 கொரி 6:

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத ஒவ்வொருவரு
''எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்ற
களானார்கள்.'' (ரோமர் 3:23) ''நீங்கள் மனந்திரும்பாட
போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்
(லூக் 13:15) என்று வேதம் சொல்லுகிறதை அறி
வேண்டும்.

''உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்க
தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்க
பாவங்களோ அவர் உங்களுக்குச் செவிகொடாதபடி
அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது
(ஏசா 59:2)

ஆனால், ''இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேக
காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தம்'' (மத் 26:2
''அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக: ஏனெனின் அ
தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்ப
(மத் 1:21)

''நம்முடைய பாவங்களை நாம் (அவருக்கு) அறிக்
யிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியா
தையும நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மை

யுமுள்ளவராயிருக்கிறுர்'' (1 யோவ 1:9) என்பதை
றிய வேண்டும்.

இந்த வேத வாக்கியங்களின்படி நாம் கிறிஸ்துவை
முடைய பாவங்களை மன்னிக்கிறவராக ஏற்றுக்கொள்ளா
நப்போமாகில், நாம் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்ட
களாயிருப்போம். அவர் நமக்குச் செவி கொடுக்க
ட்டார்.

ஆயினும் சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தினுல்
முடைய பாவங்களுக்கு மன்னிப்பும் சுத்திகரிப்பும் உண்டு.
ம் நம்மைத்தாழ்த்தி நம்முடைய பாவங்களை அறிக்கை
டு இப்பொழுதே அவரை ஏற்றுக்கொள்ளக்கடவோம்.

''நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்'' என்று
பாவ 3:7) ல் இயேசு சொன்னுர். ''ஒருவன் கிறிஸ்துவுக்
ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறுன் - பழையவைகள்
ந்துபோயின, எல்லாம் புதிதாயின'' என்று
கொரி 5:17) ல் பவுல் கூறினுர். இது தான் புதிய பிறப்
ன் அனுபவம்.

கிறிஸ்து உண்மையிலேயே நம்முடைய ஜீவியத்திற்
ர் பிரவேசிக்கிறுர். அவர் நமக்குள் வாசம் செய்ய
ரம்பிப்பதின் மூலம் நாம் புதியவர்கள் ஆகியிருக்கிறேம்.
து ஒரு மார்க்கத்தை ஏற்றுக்கொள்வதல்ல; கிறிஸ்துவை
றுக்கொள்வதேயாகும். அவர் ஒரு ஆள், ஒரு தத்துவ
ஸ்திரம் அல்ல. இது உண்மை, ஒரு உபதேசமல்ல.

நான் விவாகம் செய்து என் மனைவியை என்னுடைய
வியத்தில் ஏற்றுக்கொண்ட பொழுது நான் ''கல்யாணம்
ன்னும் மார்க்கத்தை'' ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு
ளையே ஏற்றுக்கொண்டேன்; அந்த ஆள் என் மனைவி.

அப்படியே நான் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவை
என்னுடைய ஜீவியத்தில் ஏற்றுக் கொண்டபொழுது நான்

''கிறிஸ்தவ மார்க்கத்தை'' அல்ல; நான் ஒரு ஆளை ஏற்
கொண்டேன் ;-அந்த ஆள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து

என்னுடைய விவாகம் எத்தனை உண்மையோ
போலவே என்னுடைய மனமாறுதலும் உண்மையா
திட்டவட்டமான அனுபவமாகும். இவை இரண்டிலு
நான் மற்றொரு ஆளை என்னுடைய ஜீவியத்தில் ஏற்
கொண்டேன்.

இரட்சிப்பின் நிச்சயமான அனுபவத்தை அறி
யின் நான், ''இரட்சிக்கப்பட்டிருக்கிறேனு'' என்பது திட
மாகத் தெரியவில்லை என்று சொல்லுவது, விவாகம் செ
ஒருவன் நான் விவாகம் செய்திருக்கிறேனு என்பது நிச
மாகத் தெரியவில்லை என்று சொல்வதைப் போன்ற நிய
மற்ற சாக்குப் போக்காகும்.

இரட்சிப்பு இன்னதென்று விளங்காதவர்களிடத்
நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா என்று கேட்ட
''இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன்; ந
இரட்சிக்கப்பட இருக்கிறேன். ஆனால் அதைப்பற்றி என
திட்டமாகத் தெரியவில்லை'' என்று சொல்லுவார்கள்.

இது விவாகம் செய்த ஒரு மனிதன் ''நான் விவா
செய்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். விவாகம் செய்
போல் இருக்கிறது, ஆனால் அதைப்பற்றி எனக்குத் தி
மாகத் தெரியவில்லை'' என்று சொல்வது போலாகும்.

மரணத்தை விட்டு நீங்கி நாம் ஜீவனுக்குட்பட்
கிறோம் என்று அறிந்திருக்கிறோம் என்று (I. யோவ. 3:1
யோவான் கூறினார்.

இவ்வுலகத்தில் நீ ஒருக்காலும் அறியக்கூடாத அ
காரியங்கள் இருக்கின்றன. ஆனால் கிறிஸ்துவின் ஜீ
உன்னிலிருக்கிறதென்பதை நீ நிச்சயமாய் அறியலாம்.

நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாய் என்பதையும் அதனால் புபிறப்பு அடைந்திருக்கிறாய் என்பதையும் நீ அறியலாம்.

''நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்பதை நான் விதம் அறிவது? என்னுடைய பாவங்கள் எனக்கு னிக்கப்பட்டிருக்கிறது என்பதின் நிச்சயம் எனக்கு படித்தெரியும்?'' என்று சிலர் கேட்கலாம்.

பிலிப்பு பட்டணத்திலுள்ள சிறைச்சாலைக்காரன் ஆண்டவமாரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன ய்ய வேண்டும்?'' என்று பவுலையும், சீலாவையும் ட்டான். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி பொழுது நீ ''இரட்சிக்கப்படுவாய்'' (அப். 16:30,31)

''விசுவாசமுள்ளவனாகி (சுவிசேஷத்தில்) ஞானஸ் னம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்'' (மாற் 16:16) ன்று இயேசு சொன்னார்.

''கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக் கயிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் ன்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் நீ இரட்சிக்கப் டுவாய்'' (ரோ 10:9) என்று பவுல் சொன்னார்.

கர்த்தருடைய நாமத்தைத்தொழுது கொள்ளுகிறவன் வனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று பேதுரு சான்னார் (அப். 2:21)

இந்த ஒவ்வொரு வேதவாக்கியமும் ''நீ இரட்சிக்கப் டுவாய்'' என்னும் வாக்குத்தத்த முடையதாயிருக்கியது. ந்த வேதவாக்கியங்களைப் பின்பற்று. அவைகள் என்ன சால்லுகின்றனவோ அதைச்செய்.

நீ கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதை அப்பொழுது றிவாய். இப்பொழுது இரட்சிக்கப்பட்ட நிலையில் மரணத் னின்று ஜீவனுக்குள் பிரவேசித்திருக்கிறாய். இது தான்

கிறிஸ்தவ சித்தாந்தம்; இது ஒரு மார்க்கத்தை ஏற்றுக் கொள்வதல்ல.

நான் ஒரு நஷ்டப்பட்டபாவி என்று சொல்லிக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவனுமாய் அவரை தன்னுடைய ஆண்டவரும் எஜமானுமாக எண்ணி அவருக்குச் சரண் அடைந்தவனுமாய் உலகத்தின் முன் அவரை அறிக்கை செய்கிறவனுமாய் தன்னுடைய அன்றாட ஜீவியத்திலே அனுதினமும் அவரைப் பிரியப்படுத்தப்பாடு படுகிறவனுமாய் தேவனண்டை வருகிறவன் எவனோ அவன் தான் உண்மைக் கிறிஸ்தவன்.

இயேசு கிறிஸ்துவை உன்னுடைய இருதயத்தில் ஆண்டவரும் எஜமானுமாய் ஏற்றுக் கொண்ட அனுபவம் உனக்கு நிச்சயமில்லாதிருக்குமாகில் உன் பாவங்கள் மன்னிக்கப்படுவதைக் குறித்தும் தேவனோடு நீ சமாதானம் பெறக்கூடிய வழியைக் குறித்தும் மாபெரும் சந்தோஷமாகிய கிறிஸ்தவ ஜீவியத்தைச் செய்யும் முறையைக் குறித்தும் மகிழ்ச்சியோடு உனக்குக் காண்பிக்கிறேன்.

முதலாவது: நீ பாவி என்பதை உணர்வாயாக. ''எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானார்கள்.'' (ரோ 3:23) நம்மில் பாவம் இல்லையென்போமாகில், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். (I யோவ 1:8)

இரண்டாவது: உண்மையிலே மனஸ்தாபப்பட்டு உன் பாவங்களை விட்டு மனந்திரும்பு. ''ஆயக்காரன் தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்திற்கு ஏறெடுக்கத் துணியாமல் தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்'' என்றான் (லூக் 18:13)

''தேவனுக்கு ஏற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப் படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்பிற்கு ஏதுவான மனந் திருப்புதலை உண்டாக்குகிறது.'' (II கொரி 7:10)

மூன்றாவது: உன்னுடைய பாவங்களை தேவனிடத்தில் அறிக்கை செய், "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ் வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்துவிட்டு விடுகிறவனே இரக்கம் பெறுவான்.'' (நீதி. 28:13)

''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியு முள்ளவருமாயிருக்கிறார்.'' (I யோவ 1:9)

நான்காவது: உன் பாவங்களை விட்டுவிடு. "துன் மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவு களையும் விட்டு கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன். அவர் அவன்மேல் மனதுருகுவார். நம்முடைய தேவனிடத்தில் திரும்பக்கடவன். அவர் மன்னிச்கிறதற்கு தயை பெருத் திருக்கிறார்'' (ஏசா. 55:7)

''அவைகளை (தன் பாவங்களை) அறிக்கை செய்து விட்டு விடுகிறவனே இரக்கம் பெறுவான்." (நீதி 28:13)

ஐந்தாவது: உன்பாவங்களை மன்னிக்கும்படி கேள். "அவர் உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து'' (சங் 103:3) "வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும், அவைகள் இரத்தம் பிற சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்." (ஏசா1:18)

ஆறாவது: உன் முழு ஜீவியத்தையும் கிறிஸ்துவுக்குப் பிரதிஷ்டை செய் (ஒப்புவி). மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோ

சுத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்." (மத் 10:32)

"நீங்களோ அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாய் இருக்கிறீர்கள்" I பேது 2:9

ஏழாவது: தேவன் தம்முடைய கிருபையினால் உன்னை இரட்சிக்கிறார் என்பதை விசுவாசி. "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளால் உண்டானதல்ல." (எபே 2:8,9)

தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து அவருடைய பெரிதான கிருபையினாலும் அன்பினாலும் என் பாவங்களைத் தமது சரீரத்தில் சுமந்தவராய்ச் சிலுவையில் எனக்காக என்னுடைய ஸ்தானத்தில் மரித்தார்.

இதை விசுவாசித்தவனாய் இப்பொழுதும் அவரை என்னுடைய பாவத்தைப் போக்கும் இரட்சகராயும் நரகத்தினின்றும் பிசாசின் வல்லமையினின்றும் விடுவிக்கிறவராயும் ஏற்றுக்கொள்ளுகிறேன். அவரை என்னுடைய ஜீவியத்தின் ஆண்டவராக ஒப்புக்கொண்டு இப்பொழுதும் அவரையே பிரியப்படுத்த என் ஜீவனை தத்தம் செய்கிறேன்.

நான் அவரிடத்தில் வந்தால் அவர் என்னைப் புறம்பே தள்ளுவதில்லை என்று இயேசு தாமே வேதாகமத்தில் சொல்லி இருக்கிறார். எனவே ஏழையும், உதவியற்றவனும் குற்றமுள்ள பாவியுமாகிய நான், இரட்சிப்பைத் தேடி அவருடைய இரத்தத்தில் மாத்திரம் நம்பிக்கை உள்ளவனும்

என் முழு இருதயத்தோடும் அவரிடத்தில் வருகிறேன்.

அவர் நிச்சயமாய் என்னைத் தள்ளமாட்டார். இக்கணமே அவர் என்னை ஏற்றுக்கொண்டார் என்று விசுவாசிக்கிறேன். அவர் இப்பொழுது என்னை மன்னித்தார் அவருடைய விலையேறப்பெற்ற இரத்தம் என்னுடைய எல்லா பாவங்களையும் நீக்கி என்னைச் சுத்திகரித்தது.

அவர் என்னுடைய மீறுதல்களுக்காகக் காயப்பட்டார். என்னுடைய அக்கிரமங்களுக்காக நொறுக்கப்பட்டார். நான் அடையவேண்டிய ஆக்கினையை அவர் அடைந்தார். நான் மன்னிக்கப்பட்டேன் என்பதை நான் அறிவேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இயேசு இப்பொழுதும் என்னை இரட்சிக்கிறார்'' என்று அவரிடம் சொல்லு.

சுகம் அடைவதற்காக மாத்திரம் நீ அவரை ஏற்றுக்கொள்வாயானால் அது தன்னயமும் தப்பிதமுமாகும். அற்புத சுகமடைவது அவருடைய ஆசீர்வாதத்தில் ஒன்றாக இருக்க அவரால் சுகம் அடைவதற்காக மாத்திரம் நீ அவரை ஏற்றுக்கொள்வாயானால் அது தப்பிதமாக இருக்கும்.

நான் என் மனைவியை விவாகம் செய்து அவளுக்கு விவாக மோதிரத்தை (தாலிக்குப்பதில்) அணிவித்தபின் சரி, இனி உங்களுக்கும் எனக்கும் ஒன்றுமில்லை, உங்களுடைய விவாக மோதிரத்திற்காக நன்றி. இதற்காகத்தான் உங்களைக் கலியாணம் செய்தேன் என்று சொல்வாளாகில் நான் நிச்சயமாக ஏமாற்றம் அடைந்தவனாயிருப்பேன்.

அப்படியே நீயும் வியாதியிலிருந்து சுகமடைவதற்காக மாத்திரம் அவரை ஏற்றுக்கொண்டு இருப்பாயானால் அவரும் நிச்சயமாக உன்னில் ஏமாற்றம் அடைவார்.

கிறிஸ்தவ சமயம் என்பது கிறிஸ்துவுக்கும் அவருடைய சபையாகிய அவருடைய சரீரத்திற்கும் தம்பதிகளுக்குள்ள சிநேகத்தைப் போன்றது.

உன்னுடைய ஜீவிய காலமெல்லாம் கிறிஸ்துவை
பிரியப்படுத்துவதற்கும் சந்தோஷமான கிறிஸ்தவ ஜீவிய
செய்வதற்கும், ஆசீர்வாதமாயிருப்பதற்கும், நீ கீழே கூ
யிருப்பவைகளைக் கைக்கொள்ளும்படி நான் உனக்கு
சிபாரிசு செய்கிறேன்.

1. வேதாகமத்தைப்படி. அனுதினமும் பதினைந்
நிமிடங்கள் நீ வேத வசனத்தை வாசிப்பதின் மூலம் தேவ
உன்னோடு பேசட்டும். அதன் பின்பு ஜெபத்திலே நீ அ
ரோடு பதினைந்து நிமிடங்கள் பேசு.

''புதிதாகப் பிறந்த குழந்தைகள் போல் தேவனுடை
களங்கமில்லாத ஞானப்பாலாகிய அவருடைய வார்த்தை
யை நீ விரும்பி வாசித்து வளர்ச்சியடை.''
(I பேது 2:3) (சங் 119:1

2. உன்னால் எவ்வளவு ஜெபிக்க முடியுமோ அ
வளவு ஜெபி. ஜெபம் என்பது தேவனோடு பேசுவதாகு
பிள்ளையானது தன்னுடைய தகப்பனோடு அனுதினமு
சாதாரணமாகப் பேசுவது போல் அவரோடுகூட
பிள்ளையைப் போல் பேசு.

''நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவ
றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திர
தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தே
னுக்குத் தெரியப்படுத்துங்கள்.'' (பிலிப் 4:6)

3. கிறிஸ்துவுக்கென்று யாரையாகிலும் ஆதா
செய். ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உனக்கு ஆகாரம் மாத்தி
(வேதவாசிப்பு) போதாது. ஆனால் அப்பியாசமும் வேண்டு

கிறிஸ்துவுக்காக வேலைசெய். அவருக்காகச் சா
கொடு. உன்னுடைய சாட்சி எவ்வளவு சாதாரண

இருந்தாலும் கூட அது மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும். (எசேக் 3:18)

4. கெட்ட சிநேகிதர்களை விட்டுவிடு. கெட்ட ஜனங்கள், மோசமான புஸ்தகங்கள், விரும்பப்படத்தகாத களியாட்டுகள், கெட்ட சிந்தனைகள் இப்படிப்பட்டவைகளை அகற்று. முதலாம் சங்கீதத்தை வாசி.

''அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளோடு பிணைக்கப்படாதிருப்பீர்களாக. நீதிக்கும் அநீதிக்கும் சம்மந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? அவிசுவாசியோடே விசுவாசிக்குப் பங்கேது? ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப்போய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறூர்.'' (II கொரி 6:14, 15,17)

துன்மார்க்கரை கிறிஸ்துவுக்கென்று ஆதாயம் செய்யப் பிரயாசைப்படு. ஆனல் அவர்களுடைய வழியில் நடவாதே. அவர்களைத் துணைவர்களாகக் கொள்ளாதே.

5. ஏதாவது நல்லதொரு சபையைச் சேர்ந்திரு. நீ சேர்ந்திருக்கிற சபை இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் கழுவுகிறதென்றும், இயேசு கிறிஸ்துவின் தழும்புகள் வியாதிகளைக் குணமாக்குகிறதென்றும், விசுவாசித்து உபதேசிக்கிறதா என்பதை நிச்சயித்துக்கொள்.

சபை கூடுதலுக்கு ஒழுங்காகப்போ. "சபை கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்" (எபி. 10:25)

உன்னுடைய போதகரோடு ஒத்துழைத்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மற்றவர்களுக்குப் பறை சாற்றுவதில் உனக்குச் சமயம் கிடைக்கும்போதெல்லாம் அவருக்கு உதவி செய்.

6. கர்த்தருடைய ஊழியத்தின் உதவிக்கென்று கொடு. கர்த்தர் உனக்குக் கொடுத்திருக்கிற வரவுக்குத் தக்கதாகக் கொடு. (I கொரி 16:2) "அவனவன் விசன மாயுமல்ல அல்லது கட்டாயமாகவுமல்ல ... உற்சாக மாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (II கொரி 9;7)

7. அதைரியம் அடையாதே. சோதனைகளையும் உபத் திரவங்களையும் எதிர் பார். ஆனால் இவைகள் உன்னை அதைரியப்படுத்தவொட்டாதே. "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவ ரும் துன்பப்படுவார்கள்." (II தீமோ 3:12).

அத்துடன் (ரோமர் 8:28) (ஏசா 41:10) இவைகளை வாசி. (ரோமர் 8:18) (யாக். 1:12) (கொரி. I 10:13) இவைகளை அடிக்கடி வாசி. அல்லது மனப்பாடம் செய்.

இச்சிறிய படிகளை அனுதினமும் உன்னுடைய சொந்த ஜீவியத்தில் ஒருபாகமாகும் வரை பயிற்சி செய். இவைகள் சுருங்கக் கூறப்பட்டிருப்பினும், இவைகள் மிகவும் முக்கிய மானவை.

இவைகள் உன்னுடைய ஜீவியம் முழுவதிலும் பொக் கிஷம் போன்று பாதுகாக்கப்படுமாகில் உன்னுடைய அன்றாட ஜீவியத்தைக் கவனிக்கிற ஆயிரக்கணக்கானோருக்கு ஆனந்தம் ஆசிர்வாதத்தையே உண்டுபண்ணும்.

உன் அயலகத்தார் வேதத்தை வாசிக்க மறுக்கலாம். ஆனால் உன்னுடைய அன்றாட ஜீவியத்தை அனுதினமும் அவர்கள் வாசிப்பார்களென்பதை ஞாபகத்தில் வை. உன் னுடைய விசுவாசத்தின் மாதிரியும் கிறிஸ்துவைப் போன்ற ஜீவியமும் அவர்களில் அநேகரைக் கர்த்தரண்டைக்கு வழி நடத்தும்.

கிறிஸ்துவை உன்னுடைய ஜீவியத்தில் ஏற்றுக்கொண்டபடியினாலும், உன்னுடைய ஜீவியத்தை முற்றிலுமாய் அவருக்கென்று ஒப்புக்கொடுத்த படியினாலும் அவர் தாமே ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிற சரீர ஆரோக்கியம் உனக்குரியது என்பதை நிச்சயத்துக்கொள்.

தம்முடைய வார்க்குத்தத்தத்தின்படியே கிறிஸ்து உன்னைச் சுகமாக்கவும், அவர் உன் ஜெபத்தைக் கேட்கிறார் என்பதை விசுவாசிப்பதுமே கிறிஸ்துவிலிருந்து உண்டாகும் அற்புத சுகத்தின் ஐந்தாம் படியாகும்.

விசுவாசத்தோடு ஜெபிப்பது என்பது சுகத்திற்காக அவரிடத்தில் யாசகம் கேட்பதும் வழக்காடுவதுமல்ல கிறிஸ்துவை உன்னுடைய சொந்த இரட்சகராக நீ ஏற்று கொண்டதுண்டானால் நீ தேவனுடைய பிள்ளை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். அவர் உன்னுடைய பிதா. நீ யாசகம் கேட்பவன் அல்ல.

எந்தப் பிள்ளையும் தன்னுடைய பெற்றோரிடத்தில் வருகிறது போலவே நீயும் உன் பிதாவினிடத்தில் வரவேண்டுமென்று அவர் விரும்புகிறார். உறுதிப்பாட்டுடன் வா. விசேஷமாக உனக்கென்று வைத்திருக்கிற அவருடைய ஆசீர்வாதங்களின் பந்திக்கு அவர் உன்னை அழைக்கிறார்.

அவர் உன்னைச் சுகப்படுத்துவேன் என்று வாக்குக் கொடுத்திருக்கிறபடியினால், அவர் உன்னைச் சுகப்படுத்த விரும்புகிறார் என்பதை ஞாபகத்தில் வை.

எந்தப் பெற்றோரும் தங்களுடைய பிள்ளைகளுக்கு மிகவும் மேலானவற்றையே கொடுக்க விரும்புவது போல நீயும் சுகமாகவும் சந்தோஷமாகவும், பலமாகவும் இருப்பதைப்பார்ப்பதே அவருக்குச் சந்தோஷமாயிருக்கும்.

''தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்'' என்று தாவீது சொல்லுகிறார். (சங். 103:13)

நீ உன் பிள்ளைகள் அவஸ்தைப் படுவதைப் பார்த்து சந்தோஷப்படுவாயா ? உன் பரம பிதாவும் நீ அவஸ்தைப் படுவதைப் பார்த்து சந்தோஷப்படுவதில்லை.

''நீங்கள் தைரியத்துடனே கிருபாசனத்தண்டை வாருங்கள்'' என்று அழைக்கப்படுகிறீர்கள். (எபி. 4:16)

''நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது உங்களுக்குக் கொடுக்கப்படும்'' என்று இயேசு சொன்னார். (யோவ. 15:7)

''கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும் .... ஏனெனில் கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான் (மத். 7:7.8) என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்'' (யோவான் 14:14) என்று இயேசு சொல்லி ஜெபிக்கும்படியாக உங்களை அழைக்கிறார்.

''நீ என்னை நோக்கிக் கூப்பிடு – அப்பொழுது நான் உனக்கு உத்தரவு அருளிச் செய்வேன்'' என்று சொல்லி ஜெபிக்க பிதா உன்னை அழைக்கிறா (எரேமி 33:3)

''கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்
மாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்களுடை
வேண்டுதலுக்கு கவனமாய் இருக்கிறது'' என்பதை நினை
துக்கொள்ளுங்கள். (I பேது 3:12).

எனவே அவர் வாக்குப்பண்ணியிருப்பதை அவ
உனக்குச் செய்யவேண்டுமென்று நீ அறிந்து ஜெபிக்கி
பொழுது அவர் உன் ஜெபத்தைக் கேட்கிறார். அவர் உ
ஜெபத்தைக் கேட்கிறார்: அவர் உன் விண்ணப்பத்திற்கு
செவி கொடுக்கிறார். அதை நம்பு.

அவருடைய பிள்ளை விசுவாசத்தோடு ஏறெடுக்கி
எந்த ஜெபமும் கேட்கப்படாமல் போவதில்லை. அவ
உன்னில் பட்சமாயிருக்கிறார், உன்னுடைய ஜெபத்தை
கேட்பதும் உன்னுடைய விண்ணப்பத்திற்கு மாறுத்தர
அருளிச் செய்வதும் அவருக்கு சந்தோஷம்.

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்பட
கேட்டால் அவர் நமக்குச் செவி கொடுககிறார்.'' (அவருடை
வாக்கின்படியே) (II யோவா 5:14)

ஆகவே நீ அவருடைய வாக்குத்தத்தங்களை அறி
திருக்கிறபடியினாலும். அவைகளை உனக்கென்றே கொடு
திருக்கிறார் என்று நீ அறிகிறபடியினாலும் கிறிஸ்து
உன்னுடைய ஜீவியத்தில் ஏற்றுக்கொண்டபடியாலும் அ
ருடைய வாக்கின்படியே உன்னுடைய சரீரத்தைச் சுக
படுத்தும்படி அவரைக் கேள்.

நீ அவரிடத்தில் கேட்கிற பொழுது அவர் உனக்
செவி கொடுக்கிறார் என்பதான நம்பிக்கை வை. "நா
எதைக் கேட்டாலும் அவர் நமக்கு செவி கொடுக்கிற
என்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நா
கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று அறிந்திரு
கிறோம்.'' (I யோவ. 5:15)

முதலாவது அவருடைய வாக்குத்தத்தங்களை நீ அறி
மலோ, அது உனக்கு தானே என்று நீ தெரியாமலோ
ருப்பாயானால் நீ ஜெபிக்கும்போது தயங்குவாய். ஆனால்
வைகள் உன்னுடையவை என்று அறிகிற பொழுது உன்னு
டைய ஜெபத்தில் உனக்கு முழு நம்பிக்கை ஏற்படுகிறது.

அப்பொழுது அவர் செய்வேன் என்று வாக்கு பண்ணி
தை அவர் செய்யும்படி நீ கேட்பாய். அவர் அதற்குச்
வி கொடுத்து உனக்கு அருளிச் செய்வார்.

———

ஜெபம் செய்யும் பொழுது நாம் கேட்டவைகளை பெற்றுக்கொண்டோம் என்று நம்புவதுதான் கிறிஸ் விலிருந்து உண்டாகும் அற்புத சுகத்தின் ஆறுவது படியாகு இந்த படியை விசுவாசம் என்று கூறுகிறோம்.

தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கும் ஆசி வாதங்களைப் பெறும்படி அனேகர் வருடக்கணக்காக ஜெபி பார்கள், ஆனால் அவர்கள் உணர்ச்சியினாலோ அல்ல கண்ணால் கண்டாலொழிய தாங்கள் கேட்டுக்கொண் வற்றின் பதிலைப்பெற்றுக்கொண்டோம் என்று நம் மாட்டார்கள். இது விசுவாசமல்ல.

தேவன் வாக்குக் கொடுத்தவைகளும், நீ கேட்பவை களும் உன்னுடையவைகள், ஆகவே உணர்ச்சியினால் அல்ல காண்பதற்கு முன்பாகவே பெற்றுக்கொண்டோம் என் உறுதிபடுத்துவதே விசுவாசம். அந்த விசுவாசமான தேவனுடைய வாக்குத்தத்தத்தின் பேரில் மாத்திரமே அடி படை கொண்டுள்ளது.

உன்னுடைய சாதாரண மனசும், விசுவாசமும் தங்களுடைய பெரிய போராட்டத்தை இங்குதான் நடப்பிக்கின்றன.

யுத்தஸ்தலமாகிய தேவனுடைய வார்த்தையும் உன்னுடைய கருத்துக்களும் இங்குதான் உள்ளன.

அற்புத சுகத்திற்கான ஜெபம் செய்தும் சில சமயங்களில் உடனடியாக பதில் கிடைப்பதில்லை. தேகத்தில் நோயும், ஜுரமும் இருக்கும். ''அவருடைய தழும்புகளினால் சுகமானீர்கள்'' என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது வியாதி இன்னும் நீங்கவில்லை என்பதாக கருத்து தெரிவிக்கிறது.

தேவனுடைய வார்த்தையின் பேரிலுள்ள விசுவாசத்தை இங்குதான் நீ அதிகரிக்க வேண்டும். உணர்ச்சிகளுக்கும் காண்பவைகளுக்கும் நீ கவனத்தைச் செலுத்தாதே. தேவனுடைய வார்த்தைகளுக்கு மாத்திரமே உன் கவனத்தைச் செலுத்து.

''என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களைவிட்டு பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக்கண்டு பிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்'' என்பதாக (நீதிமொழி 4:20-22) வாசிக்கிறோம்.

உன்னுடைய மனதையும், செவியையும், கண்களையும், இருதயத்தையும் தேவனுடைய வாக்குத்தங்களுக்கான காரியங்களுக்கு உபயோகிக்கும்படியாக இங்கு நீ போதிக்கப்படுகிறாய். அச்சம், அவ நம்பிக்கை, அதைரியம் முதலானவைகளை அப்புறப்படுத்துகிறது. இவைகளைச்செய், மாம்சத்திற்கான சுகத்தை தேவ வார்த்தையானது உனக்குள்ளே

ஊட்டும்: அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்க
குணமாக்குகிறார் (107:20)

ஒவ்வொருவருக்கும் தேவன் ஐம்புலன்களைக் கொடு
துள்ளார். அவைகளாவன, மெய், வாய், கண், மூக்
செவி. அவைகள் சாதாரண தன்மை வாய்ந்தவைக
அவைகள் நமக்கென்று இந்த உலகத்தில் கொடுக்
பட்டுள்ளன.

ஒவ்வொருவருடைய இருதயத்திலும் ஓர் அள
விசுவாசத்தை தேவன் நாட்டியுள்ளார். (ரோ: 12:3)

நமது ஐம்புலன்கள் இயற்கையாய் உள்ளது.
முடைய விசுவாசமோ ஆவிக்குரியது அல்லது இயற்கைக்
மேலானது.

நம்முடைய ஐம்புலன்களினால் அறிவை அடைகிறோ
ஆனால் தேவனை அறிவது ஐம்புலன்களினாலல்ல. விசுவாச
தினாலேயே தேவனை அறிகிறோம். "நாம் தரிசித்து நட
மல் விசுவாசித்து நடக்கிறோம்.'' (II கொரி 5:6)

நம்முடைய புலன்கள், தேவனை அறிந்து அவருடை
ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கான சாதனங்க
அல்லவே. உணர்ச்சியினால் அல்லது கண்களினால் கண்ட
லொழிய, ஜெபத்தின் பதிலை அடைந்து விட்டோம் என
அநேகர் நம்புவதில்லை. விசுவாசம் என்பது என்ன என்
அவர்கள் அறியவில்லை.

எழுதப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையான
மூன்று தத்துவமானது என்று ஜனங்கள் எண்ணுகிறார்க

1. தேவனுடைய வார்த்தைகள் உண்மையான
என்று சம்மதிக்கிறார்கள். வார்த்தையைப் பார்க்கிறார்க
அதை வாசித்து மகிழ்கிறார்கள். முழு அதிகாரங்களையு
மனப்பாடம் செய்து ஒப்புவிக்கிறார்கள். அவர்கள் அ
களை நேசித்து மதிக்கிறார்கள்.

அவர்கள் கூறுவதாவது: "இது உண்மை, ஆனா
என்னுடைய ஜீவியத்தில் அல்ல, தேவனுடைய வார்த்

ண்மை என்று அறிவேன். ஆனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களை நான் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பது ஏனென்று அறிந்து கொள்ள முடியவில்லை.''

இது அதிசயமான புஸ்தகம். ''நான் அதிகம் விரும்புகிறேன்.'' ஆனால் இதுவரைதான் அவர்கள் பேசுவார்கள். அந்த வார்த்தையினால் ஆன கிரியைகளைச் செய்யமாட்டார்கள்.

2. உணர்ச்சி ததும்பும்பொழுது விசுவாசிப்பார்கள்; எனக்காக அவர்கள் ஜெபிக்கும் பொழுது நான் சுகம் பெறவில்லை, ஆனால் ஒரு பெரிய ஆசீர்வாதத்தைப் பெற்றேன்.''

''நான் சொஸ்தமடைவேன் என்று நிச்சயிக்கிறேன்; இன்று நன்றாக இருப்பதுபோல் உணருகிறேன், நான் ஜெபம் செய்யும்பொழுது ஒருவித உணர்ச்சி ததும்பப் பெற்றேன்; ஆகையால் தேவன் என்னுடைய சத்தத்திற்கு செவி கொடுத்திருக்க வேண்டும்'' என்று அவர்கள் கூறுவதைக் கேட்கலாம்.

அல்லது ''ஓ ! நான் அநேக தடவைகள் ஜெபம் செய்தேன், ஒரு வித உணர்ச்சியும் இல்லை'' என்று கூறுவார்கள்; ஆகவே உணர்ச்சியினால் மாத்திரமே அவர்கள் விசுவாசிப்பார்கள். இது ஒருபோதும் விசுவாசமல்ல.

3. அவர்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பார்கள். அவருடைய வார்த்தைகளுக்கான கிரியையையும் நடப்பிப்பார்கள். இவர்களே உண்மையான விசுவாசத்தைக் கொண்டவர்கள்.

அவர்கள் கூறுவதாவது, "இது தேவன் கூறுவதினால் உண்மை'' :'அவருடைய தழும்புகளினால் சுகமானீர்

கள்'' என்று தேவனுடைய வார்த்தை கூறுமானல், நிச்
மாக நான் சுகமாவேன்.

''என்னுடைய தேவைகளைக் கொடுப்பேன் எ
தேவன் வாக்குச் செய்தால் நிச்சயமாகச் செய்வார்.''

''அவர் என் ஜீவனின் பெலனானவர் என்று கூறி
நிச்சயமாக அவர் பெலன்தான்.''

அவர்கள் எப்பொழுதும் வார்த்தைக்கு ஏற்ற
மாகவே நடப்பார்கள்.

''தேவன் கூறுகிற பிரகாரமாகவே தேவன் இ
கிருர்.''

''நான் எவ்விதமாக உள்ளேன் என்று தேவனுடை
வார்த்தை கூறுகிறதோ அவ்விதமாகவே உள்ளேன்''

''என்னல் எக்காரியங்களைச் செய்ய முடியும் எ
அவர் கூறிகிருரோ அக்காரியங்களைச் செய்ய முடியும்.''

''தேவன் செய்வாரென்று கூறும் வார்த்தைக
போலவே அவர் செய்வார்'' மேற்கூறிய படியெல்
அவர்கள் சொல்லுவார்கள்.

முற்றிலுமாக தேவனுடைய சத்திய வார்த்தையை
அடிப்படையாகக் கொண்ட கிரியைகளை நடப்பிப்பார்க
ஒரு வார்த்தையும் தவருதபடி, ''தம்முடைய வார்த்
கள் நிறைவேற அவைகளின்மேற் கவனம் உள்ளவரா
அவர்களுக்குக் காணப்படுகிருர்.

''ஒரு நாளில் ஆசிர்வாதத்தை அடைவேன் எ
தாக'' நம்பிக்கை கூறுகிறது.

''இது ! ஆச்சரியம் நாமும் பெற்றுக்கொள்ள வே
டும், ஆனல் அடைய முடியும் என்பதாக எனக்குத் தெ

லை. எனக்கு அறிந்து கொள்ள முடியவில்லை'' என்ப
சம்மதிக்கிறவன் கூறுகிறான்.

''நான் உணர்ச்சி பெற்று, பார்த்தால் பெற்றுக்
ண்டதாக அறிவேன் என்று புலன்கள் கூறுகிறது.''

''இப்பொழுதே பெற்றுக்கொள்வேன்! இவ்வாறு
தியிருக்கிறது! இது எனக்கானது! காத்தருக்கு ஸ்தோத்
ம்! என்று விசுவாசம் கூறுகிறது.''

''வார்த்தை இவ்விதம் கூறுகிறது என்ற அடிப்
டையைக் கொண்டது உண்மையான விசுவாசம்.'' சாதா
புலன்களுக்குத் தனிப்பட்டது விசுவாசம். புலன்கள்
காரியத்தை இல்லை என்று பதிவு செய்கிறதோ அக்
ியங்களை உண்மைப்படுத்துவதே விசுவாசம்.

நம்முடைய புலன்களுக்கும், விசுவாசத்திற்கும் எப்
ழுதும் ஒரே போராட்டமுண்டு.

நம்முடைய புலன்கள் தேவனுடைய வார்த்தைக்கு
ாதமாக எழும்புகிறது: உணர்ச்சியினாலோ, அல்லது
ணக்கூடிய பிரகாரம் இல்லாதபடியினால் அது அப்படியல்ல
று கூறி தர்க்கம் செய்து வாதாடும்.

''இது எழுதப்பட்டுள்ளது! தேவனுடைய வார்த்தை
தக் கூறுகிறது, ஆகையால் இது உண்மை!'' என்று
வாசம் அமைதலான முறையில் கூறுகிறது.

நமது புலன்களுக்கு மேலான தகுதியை தேவனுடைய
ர்த்தைக்கு கொடுப்பதே விசுவாசத்தில் நடப்பதாகும்.

விசுவாசம் தேவனுடைய வழி; இது மனிதனுடைய
க்கு மாறுபாடானது. ''என் நினைவுகள் உங்கள் நினைவு
அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று''
னுடைய வார்த்தை கூறுகிறது. (ஏசா 55:8)

உன்னுடைய மனதையும், செவிகளையும், கண்களையும், இருதயத்தையும் தேவனுடைய வார்த்தைகளுக்கு அடுத்தான காரியங்களில் வைப்பதே தேவனுடைய வழியாகும்.

நோய்வாய்ப்பட்டுள்ள காரியங்களில் தன் சிந்தனை வைத்து, ஜாக்கிரதையாய் நடக்கும்படி கூறுபவர்களுக்கு செவியைச் சாய்த்து, ஏதேனும் ஒன்றைக் குறிக்கும் அ குறியில் தன் கண்களைச் செலுத்தி இருதயத்தை பய திலும், அதைரியத்திலும் நிரப்புவதே மனித வழியாகும்.

அவருடைய வார்த்தையின் பேரில் மாத்திரம் ந முடைய கவனத்தைச் செலுத்துவதற்காகவே "நம்முடை மாம்சத்திற்கு சுகத்தை" அளிக்கும் வார்த்தைகளை கட்டளையிடுகிறார்;

அதை விசுவாசித்து, அறிகுறிகள் மாறுபாடானவை களைக் குறிக்கும் பொழுது உணரச் செய்கிறது.

அவனுடைய "வழிகளையும் நினைவுகளையும்" (ஏசா 55:7) விட்டுவிடுவதே தேவனிடத்தில் வருவதாகும் என்று தேவன் முதலாவது சாதாரண மனிதர்களிடத்தில் கூறுகிறார்.

தேவன் "இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிறார்" (ரோ.4:17) குருடன் பார்வையில்லாதவனாய் இருக்கும் பொழுது அவன் சொஸ்தமடைந்து விட்டான் என்று கூறினார். அவன் பார்வை அடைந்தான்-குஷ்டரோகம் வெளியரங்கமாய் இருக்கும் பொழுது குஷ்டரோகம் குண மடைந்து விட்டது என்று கூறினார், அவர்கள் திரும்பி செல்லும்பொழுதே சுகமடைந்தார்கள்,

லாசருவின் கல்லறைக்கருகில் நின்று "பிதாவே நீ எனக்குச் செவி கொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று ஜெபம் செய்தார், அவன் மரித்திருக்கும் பொழுது, அவன் உயிரோடெழுப்பப்பட வேண்டும் என்று

ஜெபித்ததை தேவன் கேட்டார் என்று அவர் அறிவார். அதுதான் விசுவாசம்.

நாம் கேட்கும் காரியங்கள் சம்பவிப்பதற்கு முன்னதாகவே கேட்டகாரியத்தை தேவன் செய்துவிட்டார் என்று நம்புவதே விசுவாசமாகும். காரியம் கைகூடிற்று என்று நாம் விசுவாசிக்கிறோம்.

ஏனென்றால் நாம் கண்டதினாலல்ல - ஆனால் தேவனுடைய வார்த்தை அவ்வாறு கூறுகிறது. இவ்விதமாக நாமும் ''இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல்'' கூறவேண்டும்.

எவ்விதமாக ஜெபித்து பதிலைப்பெறவேண்டும் என்று இயேசு சரியாகக் கூறுகிறார். நம்முடைய தேவைகளுக்கான வாக்குகளைக் கொடுத்துவிட்டு அவர் கூறுகிறதாவது:

''எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, (ஜெபம் செய்து இருபது வருடங்களுக்குப்பின்பு அல்ல; நீ சுகமான பிறகு அல்ல, நீ சுகவீனமாய் இருக்கும்பொழுதே, நீ ஜெபம் செய்து) அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள்; அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்'' (மாற்கு 11:24)

ஜெபம் விசுவாசம் என்பவைகளைக் குறிக்கும் வேதாகம வசனங்களில் இதுதான் முக்கியம் என்று நான் நம்புகிறேன். கவனியுங்கள், நீங்கள் ஜெபம் பண்ணும்பொழுது, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள்.

ஜெபம், பின்பு விசுவாசம் என்னும் கிரமத்தில் உங்களுடைய கவனத்தைச் செலுத்துமாறு கூறுகிறேன். ஏனென்றால் அநேகர் எதிர்மாறான அபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

''எதை விரும்புகிறாயோ அதற்காக ஜெபி, நீ கண்டுணர்ந்தவுடன், பெற்றுக்கொண்டதாக விசுவாசி.'' இவ்விதமாகத்தான் இருக்கும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

"சாதாரண போக்கைக்கொண்ட மனிதன் கூறுவ
வது, ''காண்பதுதான் விசுவாசிப்பது'' ஆனால் அவ்
சாதாரண போக்கைமாற்றி தேவன் கூறுவதாவது ''விசு
சிப்பதுதான் காண்பது.'' ''காண்பேன் என்று விசுவ
யாதிருந்தால்'' (சங். 27:13) என்று தாவீது கூறுகி

''விசுவாசிப்பதற்கு முன்பாக காணவேண்டு
என்று அவர் கூறவில்லை.

தேவன் தாவீதை பற்றி கூறியதாவது, ''தாவீ
என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்
சித்தமானவைகளை எல்லாம் அவன் செய்வான்.''

(அப். 13:2

''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்
கூடாத காரியம்'' (எபி. 11:6) என்று ரூபித்துக் காட்
விசுவாசத்தினால் தேவனுக்கு முன்பாக நற்சாட்சி பெறலா
(எபி. 11:2) என்கிறார்.

சாதாரண மனிதன் போராடி தர்க்கிப்பது என்
வென்றால் உணர்ச்சியின்றி என்னால் விசுவாசிக்கமுடியா
இது தேவனுடைய வழியுமல்ல. இதை நிலைப்படுத்திக்கூ
அபிப்பிராயம் வேதாகமத்தில் ஒரு இடத்திலுமில்லை. ''நா
கண்டாலொழிய...............நான் விசுவாசிக்கமாட்டேன்
(யோ. 20:25) என்று தோமா கூறினார். அவ்விதமா
போக்கு கிறிஸ்துவுக்குப் பிரியமானதல்ல. (வச. 29)

தேவனுடைய வழியாவது: ''ஜெபம் பண்ணு
பொழுது பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசி
அடையவேண்டும்'' உன்னுடைய ஜெபத்துக்கு பதிலளிப்ப
என்று நீ விசுவாசிக்கவேண்டும், அவருடைய வாக்குத்
தங்களின்படி 'நீ சுகம் அடைவாய்' என்பதுதான் கண்
துணர்த்துவது.

அதாவது சுகம் பெறும்படியாக நீ ஜெபம் செய்யும் பொழுது உன்னுடைய ஜெபத்தின் பதிலை அடைந்து விட்ட தாக நீ கருதவேண்டும் என்று கிறிஸ்து வற்புறுத்துகிருர்.

இது உண்மைதான். தேவன் வாக்குத்தத்தம் செய் துள்ள ஆசீர்வாதங்களில் ஏதொன்றிற்காகிலும் நீ ஜெபித்த துண்டானல் அவ்வாசீர்வாதத்தை தேவன் கொடுத்து இருக்கிருர்.

இது கற்பதற்கு எளிதானபாடம். பொருத்தமான இடத்தில் உன் விசுவாசத்தை ஊன்றக் கற்றுக்கொள். கண்டு உணர்ந்தபின் மனிதன் விசுவாசம் வைக்கிருன். கிறிஸ்துவோ நீ கண்டு உணரும் முன் வைக்கிருர்.

ஜெபம் தன் பதிலை அடைந்தது என்று நம்புவதற்கு தேவனுடைய வார்த்தையை ஒரே குறிக்கோளாகக் கொண் டதே விசுவாசமாகும்.

உன்னுடைய ஜெபத்தை தேவன் கேட்டார் என்று நீ விசுவாசித்த பின்பு தான் உனக்கு சுகமளிக்க ஆரம்பிப்பேன் என்று தேவன் வாக்கு கொடுக்கவில்லை. இது சத்தியமான படியால், நீ உண்மையாய் ஜெபிக்கும் பொழுது உன் ஜெபம் கேட்கப்பட்டது என்று விசுவாசி.

''அவரிடமிருந்து நாம் விரும்பும் விண்ணப்பங்களின் பதிலைக் கண்டதினல் நாம் சமர்ப்பிப்பதில்லை'' ஆனல் ''தேவன் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்'' (1 தெச. 5:24) என்பது நமக்குத் தெரியும்.

சுகமளிக்கும் விதங்களுள் மூன்றுவித சாட்சிகளுண்டு:-

(1) **வார்த்தை** கூறுவதாவது ''அவருடைய தழும்பு களினல் நீங்கள் சுகமானீர்கள்''

(2) **நோவு** இது வியாதி சுகமாகவில்லை என்பதை அறிவிக்கிறது.

(3) வியாதியஸ்தன் கூறுவதாவது: "அவருடை
தழும்புகளினால் சுகமானேன்" தன்னுடைய சாட்சி
தேவனுடைய வார்த்தையை ஒட்டிக்கூறினான். தன்னுடை
சாட்சியைத் திரும்ப ஏற்றுக்கொள்ள மறுக்கிறான். நோவு
அறிகுறிகளும் நீங்காமல் இருந்தாலும் "நான் சுகமானே
னென்றால் தேவன் அவ்வாறு கூறுகிறார்." என்கிறான்.

பின்பு வேதத்தை நினைக்கிறான். "நம்முடைய ந
பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதி
யிருக்கக் கடவோம்; வாக்குத் தத்தம் பண்ணினவர் உண்மை
புள்ளவராயிருக்கிறாரே" (எபி. 10:23) அவன் சுக
அடைந்தான் என்று கூறி தேவனுடைய வார்த்தையை
குறித்ததான அறிக்கையை நிலைப்படுத்துகிறான். தேவ
அதை நிறைவேற்றுகிறார்.

"என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடு
விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்" (சங். 89:3
என்று கூறியுள்ளார். "அது என் வார்த்தை வெறுமையா
என்னிடத்திற்கு திரும்பாது" (ஏசா. 55:11) என்று தேவ
கூறுகிறார். "ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்
சாட்சியின் வசனத்தினாலும் அவனை (சாத்தானை) ஜெயி
தார்கள் (வெளி 12:11)

வேறு விதமாகக் கூறுவோமாயின், முதலாவது தே
னுடைய பிள்ளை ஒருவர், கிறிஸ்துவின் இரத்தத்தி
மீட்கப்பட்டவராய், இரட்சிப்பை அடிப்படையா
கொண்டு சத்துருவை ஜெயித்தார். இரண்டாவதாக
தங்கள் சாட்சியில் தேவனுடைய வார்த்தையை அறிக்
செய்து ஜெயித்தார்.

சுகத்திற்காக நீ ஜெபித்த பின் சுகமடையமாட்டா
என்று சாத்தான் உன்னிடம் கூறுவான். "நான் சுகம
வேன் என்று எழுதியுள்ளது; கர்த்தர் என்னை எழுப்புவா
என்று அவனிடம் கூறு. உன்னுடைய அறிக்கையிலு
தேவனுடைய வார்த்தை எதிரியைத் தோற்கச் செய்யும்.

வனாந்தரத்தில் சாத்தான் கிறிஸ்துவைச் சோதிக்கும் பொழுது பிசாசு கேட்ட அவருடைய வார்த்தையாவது ''இது எழுதியிருக்கிறதே !'' ''இது எழுதியிருக்கிறதே'' ''இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது !'' என்பது மாத்திரமே.

''பிசாசானவன் அவரை விட்டு விட்டான் !'' இது தான் அதன் பலன். (மத். 4:4-11) ''பிசாசு சொல்லுகிறான் !'' ''பிசாசு சொல்லுகிறான் !'' ''பிசாசு சொல்லுகிறான் !'' என்று மட்டுமே சிலர் கூறுவதுண்டு.

எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை வசனித்து சாத்தானை எதிர்த்து அவனை மேற்கொள்ளுவதே கிறிஸ்துவின் வழியாகும். அவருடைய வழி செம்மையானதாக உள்ளபடியால், வேறு வழியை முயற்சிக்காமல் அவருடைய மாதிரியைப் பின்பற்றுவோமாக.

பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். (எபே 4:27) பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான். (யாக். 4:7)

இதை ஒரு திருஷ்டாந்தமாக எடுத்துக் கொள்ளுங்கள்; தளர்ந்த முழங்காலுடன் ஒரு மனிதன் என்னிடத்திற்கு வந்தான். அவனுடைய கால்கள் அவசியம் துண்டிக்கப்பட வேண்டும் என்று டாக்டர்கள் கூறினார்கள். நாங்கள் ஜெபம் செய்தவுடனேயே அவன் சுகமானான்,

ஐந்து அல்லது ஆறு தினங்களுக்குப் பின் அவன் தெருவில் நடந்து கொண்டிருக்கும் பொழுது பழைய நோவு மறுபடியும் வந்தது. அவன் கூறியதாவது: இவ்வாறு சம்பவிக்க முடியாது, ''அவருடைய தழும்புகளினால் சுகமானேன்'' என்று எழுதியிருக்கிறதே. ''இயேசுவின் நாமத்தில், நோவே என் முழங்காலை விட்டுப்போ'' என்றான். அந்த மனிதன் தேவனுடைய வார்த்தையில் ஊன்றியிருந்தான். ஒரு போதும் திரும்பாமல், நோவு நீங்கிற்று.

அவனிடம் விசுவாசம் இருந்தது. அவன் சுகமடைந்து விட்டதாக நம்பினான். ஏனென்றால் தேவன் அவ்வாறு

கூறினார். அந்த வியாதி தேவன் மேல் விழுந்தது என்றும், தேவன் ஏற்றுக் கொண்டார் என்றும் அவனுக்குத் தெரிந்தது. ஆகையால் சாத்தான் தோல்வியடைந்தான்.

நீ கண்டும் உணர்ந்தும் விசுவாசிப்பதை விட உண்மையான விசுவாசமே மேலானது. எதிர்மாறான காரியங்கள் நடக்கும் பொழுது கூட, தேவனுடைய வாக்குகளின் மீது நம்பிக்கை வைப்பதே உண்மையான விசுவாசமாகும்.

விசுவாசத்தின் தன்மையைக் குறித்து அநேகர் தப்பான அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளனர். மனதிற்கு சுறுசுறுப்பான அப்பியாசம் கொடுத்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப்பெற கவலையும் கஷ்டமும் அடையவேண்டும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

''சகல விசுவாசமும் எனக்கு உண்டு, ஆனால் சில மாறுதல்களைக் காணும்வரை நான் சுகமடைந்ததாக விசுவாசிக்கமாட்டேன்'' என்று சொல்லுகிறார்கள். என்னிடம் இல்லாத ஏதோ ஒன்றைக்கேட்க நான் மறுக்கிறேன்.

ஒரு மனிதன் சுகமானால் அது அவனுக்கே தெரியும் என்கிறான். இம்மனிதன் விசுவாசத்தைக் குறித்ததான தப்பான அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளான்.

சுகம் பெறுவதற்கான அதே விசுவாசம்தான் இரட்சிக்கப்படுவதற்கும் ஏற்ற விசுவாசம். ஒரு பாவி இரட்சிக்கப்பட்டான் என்று விசுவாசிக்க வேண்டும், தேவனுடைய வாக்குத்தத்தத்தை அடிப்படையாகக்கொண்டு, தன்னுடைய இரட்சிப்பை தைரியமாக அறிக்கை செய்யவேண்டும்.

பாவ மன்னிப்பின் சந்தோஷத்தை அடையும் முன்பே இவ்வாறு செய்ய வேண்டும் என்று வேதம் நமக்குப் போதிக்கிறது.

விசுவாசத்தினால் இரட்சிப்பின் ஈவை கேட்கும் பொழுது மாத்திரமே சந்தோஷம் உண்டாகிறது. தேவ

னுடைய வார்த்தையின் பேரில் உள்ள அதிகாரத்தைக் கொண்டு, அவன் இரட்சிக்கப்பட்டதாக விசுவாசிக்க வேண்டும்.

இதுதான் விசுவாசம்! இழந்துபோன ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கு இது தேவனுடைய வழி! ஆனால் வியாதிப்பட்ட உடல்களைச் சொஸ்தமாக்குவதற்கும் இது தேவனுடைய வழியாகும்.

வியாதியஸ்தர்கள் எப்படிப்பட்ட தன்மை உடையவர்களாயிருந்தாலும் அவர்கள் சுகமடைந்து விட்டார்கள் என்று நம்பவேண்டுமென அதே வேதம் போதிக்கிறது; தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மூலமாய் மாத்திரமே சுகமானார்கள் என்று அவர்கள் விசுவாசிக்க வேண்டும்.

சுகமளிக்கும் ஆசீர்வாதத்தை விசுவாசத்தில் கேட்டு, தைரியமாக அறிக்கை செய்தால் சுகத்தின் மகிழ்ச்சி வரும். அறிகுறிகள் உடனே நீங்கவில்லை என்று சந்தேகிக்கக் கூடாது. தேவனுடைய வார்த்தையில் உறுதியாய் நிற்க வேண்டும். அப்பொழுது அவை நிறைவேறும்.

சரீர சுகத்திற்கு இது எவ்வளவு பொருத்தமானதோ அதுபோல் ஆத்தும சுகத்திற்கும் பொருத்தமானது. உண்மையில் இதுவே அவர் உண்டாக்கிய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கான தேவனுடைய வழியாகும்.

உன்னுடைய ஜெபத்தைத் தேவன்கேட்டு, அதற்குப் பதிலளிப்பார் என்று எவ்வாறு நம்புவது என்பதைப்பற்றி படிப்பது சுகமடைவதைவிட பெரிய ஆசீர்வாதமாகும். ஏனென்றால் உனக்காகவும் மற்றவர்களுக்காகவும் விசுவாச ஜெபத்தை நீ பத்தாயிரம்தரம் அல்லது அதற்கும் மேலாக நீ ஜெபிக்கலாம்.

தேவன் உன்னுடைய ஜெபத்திற்குப்பதில் அளித்து அவருடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும் பொழுது உண்டாகும் கூறமுடியாத சந்தோஷத்தினால் உன் முழு வாழ்நாட்களையும் செலவிடலாம்.

7

கிரியை

உன்னுடைய ஜெபத்தின் பதிலுக்காக அவரைத் துதிப்பதும் அவருடைய வாக்குகளைக் கடைப்பிடித்து நடப்பதுமே கிறிஸ்துவிலிருந்து உண்டாகும் அற்புதசுகத்தைப் பெறுவது ஏழாவதுபடியாகும்.

தேவன் உன்னுடைய ஜெபத்திற்கு பதிலளித்தார் என்று விசுவாசித்து, நீ தேவனிடத்தில் கேட்டுக்கொண்ட குணமாக்குதலை பெற்றுக்கொண்டாயானால், (1) அவற்றிற்காக அவருக்கு நன்றி செலுத்தவும், (2) பெற்றுக் கொண்ட சுகத்தை கிரியைகளில் நடப்பிக்கவும் நீயாகவே விரும்புவாய்.

பதில் வெளிப்படையாகுமுன்பே தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறியதற்காக ஆபிரகாம் ''தேவனை மகிமைப்படுத்தினன்'' (ரோ. 4:20) ''விசுவாசத்தில் உறுதியாய்'' (வச. 20) இருந்தபடியால் தேவனைத்துதித்தான்.

ஏனென்றால், ''சொல்லப்பட்டபடியே,'' ''வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று'' (வச 21) விசுவாசித்தான்.

ஆகையால் பதிலைக்காண்பதற்கும், உணர்வதற்கும் முன்பாகவே கர்த்தரைத்துதிக்க அவனால் முடிந்தது. தேவனுடைய வார்த்தையை நம்பினான்.

மீனானது யோனாவை வாந்திபண்ணிப் போடுமுன், மீனின் வயிற்றிலிருந்து விடுதலை பெற்றதாகக் கூறி, யோனா "துதியின் சத்தத்தோடே பலியிட்டான்". (யோனா 2:9)

எரிகோவின் மதில்கள் ஓங்கி நிமிர்ந்திருக்கும்பொழுதே தங்கள் கைகளில் மீட்டுக்கொண்டதாக யோசுவாவும், அவனுடை ஜனங்களும் கர்த்தரைத் துதித்தார்கள். தேவனுடைய வார்த்தையை நம்பி துதித்தார்கள். விசுவாசத்திற்கு ஏற்றபடி நடந்து நகரத்தைச்சுற்றி நடந்தார்கள்.

அவ்வாறு நகரத்தின் மதிலைச் சுற்றி நடந்து துதித்துக் கொண்டிருக்கும்பொழுது மதிலானது தரைமட்டமாய் விழுந்தது. ஜெயமோ அவர்களுடையதாயிற்று. (யோசு. 6-ம் அதி)

தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளதும், அவரிடத்தில் நீ கேட்டும் பெற்றுக்கொண்டதுமான சுகமடைதலுக்காக அவரைத் துதிக்காமாலிருப்பது, "பெற்றுக்கொண்டதை" நீ விசுவாசியாமலிருப்பதையும் அல்லது தேவனிடத்தில் நன்றிகெட்டவனாயிருப்பதையும் நிரூபித்துக் காட்டுகிறது.

"சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக" (சங். 150:6) என்று தாவீது கூறுகிறார்.

உண்மையான விசுவாசமானது பதில் கிட்டியதற்கான துதியுடன் மாத்திரமல்ல, எப்பொழுதும் துணையான கிரியைகளுடன் கூடியது. "விசுவாசம் யாது என்பதை என்னுடைய கிரியைகளினால் காண்பிப்பேன்" என்று யாக்கோபு கூறுகிறார்.

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நல்லவைக
அவைகள் நிறைவேறுவதை நீ காணும் முன்பே நிறைவே
தலுக்கான துதி செலுத்தி அவைகளின்படி நடப்
உண்மையான விசுவாசமாகும். இக்காரியம் சகலத்தை
நலமுறச்செய்ய தேவனை ஏவுகிறது.

கிறிஸ்துவினிடமிருந்து சுகம்பெற விரும்பி ம
ஆறு விசுவாசப் படிகளையும் ஏற்றுக்கொண்டு, சுகத்திற்க
நீ ஜெபம் பண்ணியும் அவைகள் கேட்கப்பட்டிரு
மென்று விசுவாசிக்கவில்லையானால், அல்லது கிட்டிய
லுக்காக நீ அவரைத் துதிக்குமளவிற்கு விசுவாசிக்கவில்
யானால், அல்லது சத்தியம் நிறைந்துள்ள அவருடை
வார்த்தைகளின்படி நடக்கவில்லையானால் உன்னுடை
விசுவாசம் ஒரு லாபத்தையும் அடைவதில்லை.

யாக்கோபு இரண்டாம் அதிகாரம் முழுவதும் வி
வாசத்திற்கு வழிகாட்டும் முக்கிய இரகசியத்தைய
அவருடைய வார்த்தைகளின்படி உள்ள கிரியைகளை
காண்பிக்கிறது. (வச. 14).

''என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமு
டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனு
பிரயோஜனம் என்ன? அந்த விசுவாசம் அவனை இ
சிக்குமா?'' (வச. 15:17)

''ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்
மலும், அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போ
உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதா
தோடே போங்கள், குளிர் காய்ந்து பசியாறுங்கள் எ
சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்
கொடாவிட்டால் பிரயோஜனம் என்ன? அப்படியே
வாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தா
செத்ததாயிருக்கும்.''

யாக்கோபு விசுவாசத்தை அன்போடு ஒப்பிடுகிறார். அன்பின் கிரியைகள் நம்முடைய வார்த்தைகளை சேர்ந்திராமல் அன்பின் வார்த்தைகளால் மாத்திரம் இருந்தால் மதிப்பற்றதாயிருக்குமென்று அவர் கூறுகிறார். அப்படியே விசுவாசமும் நம்முடைய வார்த்தைகளோடு சேர்ந்து விசுவாசக் கிரியைகளாயிருக்காவிட்டால் மதிப்பற்றிருக்கும்.

நிச்சயமாக மரிக்கும் தருவாயிலிருந்த, க்ஷயரோக ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு அனுப்பப்பட்ட ஒரு பெண் நியூயார்க்கில் ஒரு நாள் சாயங்காலம் வேதத்தை வாசித்துக் கொண்டிருந்தாள். அவள் அருமையான கிறிஸ்தவள், ஆனால் அவளுக்கு தெய்வீக சுகத்தின் உண்மை ஒருபோதும் கற்றுக் கொடுக்கப்படவில்லை.

1. பேதுரு இரண்டாம் அதிகாரத்தைப் படுத்துக் கொண்டு வாசிக்கும்போது கீழ்க்காணும் வசனத்தைக் கண்டாள். (வச. 14) ''அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்''.

அவளுடைய பாவங்களை முன்பே அவர் சுமந்தபடியால் நன்றி நிறைந்தவளாய் அழுதாள். அவள் மரிக்கும் நேரம் வந்தபோது அதை அறிந்து, அச்சமின்றி, தயாராக இருந்தாள். ஏனென்றால் அவளுடைய பாவங்களை முன்பே கிறிஸ்து சுமந்தாரென்று வேதாகமம் கூறிற்று.

வேத சத்தியத்தைக் குறித்து மகிழ்ந்து கொண்டிருக்கும்போது மறுபடியும் இந்த வசனத்தை வாசித்தாள். ''அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமானீர்கள்.

வசனத்தின் முதல் பாகத்தைமறுபடியும் வாசித்தாள். முன்னதாகவே அவளுடைய பாவங்களை கிறிஸ்து சுமந்தாரென்று கூறுகிறது. இது முன்பு நடந்த காரியம், ஆகையால் அவள் இரட்சிக்கப்பட்டாள். அவள் அதை அறிந்தாள். அவளுக்கு சந்தேகத்தை உண்டாக்க இப்போது ஒருவராலும் கூடாது.

''அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமானீர்க
என்ற வார்த்தைகளின் கருத்து என்ன? யாதொரு உ
ளான கருத்தின்றி, அவளுடைய பாவத்தைக் குறிக்கி
என்பது உண்மையா? ''ஆம்! அவைகள் உண்மை
யிருக்கவேண்டும். அது தேவனுடைய வார்த்தைக
என்று எண்ணினுள்.

பின்னர் தன் தாயாரிடம் ''அம்மா நான் சுக
னேன், என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது உ
களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள். ''அன்பே?
என்ன அர்த்தம் கொண்டாய்'' என்று தாய் கேட்டா

''இங்கே சற்று கவனியுங்கள், அவருடைய தழு
களால் நீங்கள் சுகமானீர்கள் என்று வேதம் கூறுகிறது,
என்று கன்னங்களில் கண்ணீர் வடிய மகள் கூறின
அம்மா அது ஏற்கனவே முடிந்து விட்டது, நான்சுகமடைந்
விட்டேன், என்னுடைய உடுப்புகளே எடுங்கள். இந்த
படுக்கையை விட்டு எழும்ப வேண்டும் என்ருள்.

தாய் மகளேச் சாதாரண நிலேக்கு கொண்டு
முயன்ருள். ஆனல் முடியவில்லே. தேவனுடைய சு
வார்த்தைகளேயும் நம்ப வேண்டுமென்று நீங்கள் எனக்
போதிக்கவில்லேயா? இது தேவனுடைய வார்த்தைக
ஞல் இது உண்மை, நான் சுகமானேன். ஏனென்று
தேவன் பொய் சொல்லமாட்டார். என்று அழுத்தமாக
கூறினுள்.

அவள் எழுந்து உடைகளே அணிந்து கொண்டா
வீட்டில் நடந்துகொண்டிருக்கும்பொழுதே தேவனை
துதித்தாள், பூரண சுகம் பெற்ருள். பின்பு மூன்
வாரத்திற்குள் அவளுடைய வயதுப் பெண்களுக்கு இரு
வேண்டிய எடையை அடைந்தாள். அவளுடைய எக்ஸ்
படத்தைப் பார்த்தபொழுது மிகவும் பரிபூரண சுத்த
கவேயிருந்தது.

என்ன சம்பவித்தது ? தேவனுடைய வார்த்தையின் படி நடக்குமளவிற்கு அவள் பூரணமாக விசுவாசித்தாள். அவளுடைய கிரியைகள் அவளுடைய விசுவாசத்தை எடுத்துக் காட்டியது.

அவளுக்காக தேவன் கூறியவற்றை அதிகாரமாகக் கேட்டு, விசுவாசத்தினுல் படுக்கையை விட்டு எழுந்து, தேவனுடைய வார்த்தையின்படி நடக்காவிட்டால், தன் னுடைய படுக்கையிலேயே, க்ஷயரோகத்தினுல் மரித்தி ருப்பாள்.

ஆயிரக்கணக்கான மக்கள் தேவனுடைய வார்த் தையை அநேக காலமாக விசுவாசிக்கிறோம் என்று கூறியும், ஒருபோதும் விசுவாசத்தோடு கூடிய கிரியைகளை நடப்பிக் காமல், பூரண வயது ஆகுமுன்பே மரிக்கிறுர்கள். ''விசு வாசமும் கிரியைகளில்லாதிருந்தால் செத்ததாயிருக்குமே'' என்று யாக்கோபு கூறுகிறுர்.

தேவனுடைய வார்த்தைகள் உண்மையானவைகள் என்று விசுவாசிக்கிறோம் என்கிறுர்கள். அதே சமயத்தில் அதற்கு எதிர்மாருக நடக்கிறுர்கள். படுக்கையில் தங்கள் விசுவாசத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

ஆனுல் விசுவாசத்தில் எழுந்து, அவருடைய வார்த் தைகளின்படி நடந்து, சுகத்தைப் பெறப் பயப்படுகிறுர்கள். அவர்களுடைய விசுவாசம் பெரியதாயிருக்கும், ஆனுல் செத்ததாக இருக்கிறபடியால் ஒரு இலாபமும் அடைகிற தில்லை. ஒரு கிரியையும் கிடையாது.

''கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி. நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினுலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே'' (யாக். 2:18) என்பதாக யாக்கோபு கூறுகிறுர்.

தன்னுடைய வாழ்க்கையில் நடந்த கீழ்க்கண்ட சம்ப வத்தை கனம் பைரன் கூறுகிறுர்.

“கர்த்தர் என்னைத் தமது ஊழியத்திற்கென்று அழைத்த கொஞ்ச காலத்திற்குப் பிறகு மிகவும் மேன்மை யான விசுவாசத்தைப் பற்றிய ஓர் பாடத்தைக் கற்றேன்

எங்கள் ஜனங்களுக்குள்ளே அநேக வியாதிகள் இரு தன. எங்கள் குடும்பத்தில் மூன்று பேர்கள் ஜுரத்தி பீடிக்கப்பட்டனர். என்னையும் அந்த ஜுரம் பிடித்ததா உணர்ந்தேன். சிறிது காலத்தில் நானும் அந்த ஜுரத்தினு அதிகம் பீடிக்கப்பட்டேன்.

எரியும் காய்ச்சலினுல் படுக்கையில் படுத்துக்கொண் கொடும் வேதனை அடைந்துக்கொண்டிருந்த சமயத்தி தேவனிடம் தாழ்மையாய் கேட்க ஆரம்பித்தேன். என் ஊழியத்திற்கென்று அழைத்திராஞல் தற்போதைய நிலையி நிறைவேற்ற முடியாதவனுய் இருக்கிறேன் என்றேன்.

விசுவாசத்தில் சுகம் பெறும் நம்பிக்கையுள்ள பெ யவர்கள் அங்கு இல்லாதபடியால் என்னுடைய காரியத்தை குறித்து நானே கர்த்தரிடத்தில் பேசவும், யோ. 15:7-ல் உள்ள வாக்குத்தத்தங்களையும் எடுத்துக் கூறலானேன்.

“நீங்கள் என்னிலும் என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும்.”

நான் எவ்வளவாக தேவனுக்கு என்னை ஒப்பு கொடுத்துள்ளேன் என்று நான் சோதித்துப் பார்த்தேன். என்னை ஆராய்ந்து பார்க்கும்படி அவரைக் கேட்டே அவருக்காக எதையும் செய்யச் சித்தமாயிருந்தேன்.

“கர்த்தாவே உம்மில் நான் நிலைத்திருக்கிறேன். உம்முடைய வார்த்தைகள் என்னில் நிலைத்திருக்கிறது. ஆகையால் இந்த வாக்குத் தத்தம் என்னுடையது. என

னுடைய காரியத்தை முழுவதுமாக உம்முடைய கைகளில் ஒப்படைத்துவிட்டேன், என் முழுஇருதயத்தோடும் உம்மைக் கெஞ்சுகிறேன், என்னைக் குணமாக்கும்,'' என்றேன்.

''காரியம் முடிவதற்காகக் காத்திருந்தேன், ஆனால் ஒரு மாறுதலும் இல்லை'' முடிவில் ''கர்த்தாவே நான் ஏன் சுகமாகவில்லை'' என்றேன் ''என்னுடைய வார்த்தையில் என்னை ஏற்றுக்கொண்டு, எழும்பு'' என்ற பதில் உடனே வந்தது.

''ஆமென் கர்த்தாவே, நான் செய்வேன்'' என்றேன். யாதொரு சலிப்புமின்றி என்னுடைய படுக்கையைவிட்டு எழ ஆரம்பித்தேன். நோவினால் என்தலை வெடித்துவிடும் போலிருந்தது, ஆனால் என்னுடைய பெலவீனத்தில் நான் உடுப்புகளை மாற்றிக்கொண்டேன்.

''உடுப்புகளை மாற்றிக்கொண்டிருக்கும்பொழுதே, என் உடம்பில் கொஞ்சம் மாறுதல் ஏற்பட்டது, முழங்கால் வரையும் சுகம் பெற்றேன், அதற்காக, கர்த்தருக்கு துதி செலுத்தினேன். உடைகளை அணிந்தபின் மறுபடியும் நன்றி கூறியவுடன் இன்னும் கொஞ்சம் சௌகரியமாயிருந்தது, கர்த்தர் என்னைக் குணமாக்கினாரென்று கூறி மறு அறைக்குள் சென்றேன்.

இருபது நிமிடம் கழித்து, ஜுரம் முழுவதுமாக என் தேகத்தை விட்டு நீங்கியது. உடனே நான் ஊழியத்திற்குச் சென்று, அந்த நாழிகையிலிருந்து ஆரோக்கியமாக இருந்தேன்.

''நான் படுத்துக்கொண்டு, தேவனுடைய வார்த்தையின்படி விசுவாசத்தில் தைரியமாய் நடக்க மறுதலித்திருப்பேனானால் நிச்சயமாக அநேக காலமாக வியாதியில் பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். தேவனுக்கு சகல மகிமையும் உண்டாவதாக.

எதிர்மாறாகக் காண்பிக்கும் ஒவ்வொரு அறிகுறிக்கும் பதிலாக விசுவாசத்தின்படி நடப்போமானால் தேவன் எப்பொழுதும் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுவார்.

"ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கும்" (யாக்கோபு 2:26) என்று யாக்கோபு கூறுகிறார்.

வேதாகமம் முழுவதிலும் விசுவாச மனிதர்கள் கிரியை செய்கிற மனிதர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்த மனிதர்கள் அவருடைய வார்த்தைகளின்படி நடந்தார்கள்.

"எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ" என்று திமிர் வாதக்காரனிடம் இயேசு கூறினார். "ஆனால் கர்த்தாவே நான் திமிர்வாதக்காரனாய் இருக்கிறேனே" என்று அந்த மனிதன் கூறவில்லை.

கிறிஸ்து கூறிய வார்த்தைகளின்பேரில் விசுவாசித்து நடக்கலானான். அவனுடைய கிரியை அவனுடைய விசுவாசத்தை நிரூபித்துக் காட்டியது.

"உடனே அவன் எழுந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கு முன்பாக நடந்து போனான்." (மாற். 2:12)

மாற்கு மூன்றும் அதிகாரத்தில் இயேசு சூம்பின கையையுடைய மனிதனை நோக்கி, "உன் கையைநீட்டு" என்று கட்டளையிடுகிறார். தன்னுடைய கை சூம்பினதாயுள்ளபடியால் தன்னுடைய கைகளை நீட்ட முடியாது என்று அவன் கூறவில்லை.

அவருடைய வார்த்தைகளின்படி நடக்க கிறிஸ்துவின் வார்த்தைகளை விசுவாசித்து "அவன் கையை நீட்டினான்; அவன் கை மறு கையைப் போல சொஸ்தமாயிற்று" (வச. 5).

யோவான் ஐந்தில் சூம்பின உறுப்புடைய மனிதனைப் பார்த்து இயேசு கூறியதாவது, ''எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட''. அவருடைய வார்த்தைகளை அந்த மனிதன் நம்பினான், தன்னுடைய விசுவாசத்தைக் கிரியைகளில் நடப்பித்தான், சொஸ்தமடைந்தான். (வச. 9)

பேதுருவின் வீட்டில் அவனுடைய மாமி ஜுரத்தினால் படுக்கையிலிருந்தாள். இயேசு ''ஜுரம் நீங்கும்படியாகக் கட்டளையிட்டார்'' என்று லூக்கா கூறுகிறார். ''அவள் கையைப் பிடித்து, அவளைத் தூக்கி விட்டார்; உடனே ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று.'' (மாற். 1:31) என்று மாற்கு கூறுகிறார்.

கிரியையோடு சேர்ந்த விசுவாசத்திற்கு இது ஒரு தகுந்த உதாரணம்: (1) ஜுரம் நீங்க கட்டளையிட்டார். (2) அவளை எழும்பச் செய்து அவளுடைய விசுவாசத்தை செய்து காட்டச் சொன்னார் (3) ஜுரம் நீங்கிற்று.

அப்போஸ்தலர் நடபடிகளில் பேதுரு சூம்பின உறுப்புடையவனுக்கு கட்டளையிட்டதாவது. ''நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட,'' என்றார். (3 : 6) இயேசுவின் நாமத்தினாலே கூறப்பட்ட பேதுருவின் வார்த்தையைக் கேட்டு நடந்தான். உடனே சொஸ்தமானான்.

எட்டு வருடங்களாக திமிர்வாதமுள்ள ஒரு மனிதனைப் பார்த்து பேதுரு கூறுகிறார், ''ஐநேயாவே, இயேசு கிறிஸ்து உன்னை குணமாக்குகிறார்; நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள். (அப். 9:34) ''உடனே அவன் எழுந்திருந்தான்''

நம்முடைய தபால்காரன் கூறுவதின்படி நடக்கின்றோம். ரிஜிஸ்டர் பார்சல் ஒன்று நமக்கு தபால் நிலையத்தில் வந்துள்ளது என்று அவன் கூறுகிறான். நாம் காண்பதற்கு

முன்னதாகவே, அவன் கூறுவதை நம்பி, தபால் நிலையத் போய் பார்ஸலைக் கேட்கிறோம்;

டாக்டர் கூறுவதின்படி நடக்கிறோம். நாள் ஒன்றி மூன்று மருந்து வில்லைகள் எடுக்குமாறு நம்மிடம் கூறுகிற சரியான தேகநிலையை உணர்வதற்கு முன்பாகவே, அ கூறிய வார்த்தைகளை நம்பி மருந்து வில்லைகளை எடுக்கிறோ

பாங்குக்காரன் கூறும்வார்த்தைகளின்படி நட கிறோம். நம்முடைய பெயரில் ஒரு சிநேகிதன் ஓர் தொ யைப் போட்டிருக்கிறதாக நமக்கு அறிவிக்கப்படுகிற நாம் அந்தப் பணத்தைப் பார்ப்பதற்கு முன்பாக அவன் கூறுவதை நம்பி அந்த பணக்கணக்கை சரி பா கிறோம்.

பரமபிதாவின் வார்த்தைகளின்படி நடக்கிறோ ''நானே உன்பரிகாரியாகிய கர்த்தர்;'' ''அவருடை தழும்புகளினால் நீங்கள் சுகமானீர்கள்'' என்று அவர் கூ கிறார். அவரை நாம் நம்புகிறோம்; சுகம் பெறும்படி அ ரிடம் போய் ஜெபம் செய்கிறோம்; நம்முடைய ஜெபங்க கேட்கிறார் என்று நம்புகிறோம்.

சுகமடையும் முன்பாகவே நம்முடைய வியா படுக்கையை விட்டு எழும்பி, அவர் நமக்கு பதிலளி படியால் அவரைத் துதிக்கிறோம். அவருடைய வார்த் களின்படி நடக்கிறோம், தேவன் அதை உறுதிப்படுத்துகி (எரே. 1:12) ''என்னுடைய வார்த்தையைத் தீவிரமா நடத்துவேன்''

1 இராஜா. 8:56 ''அவர் சொன்ன அவருடை நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையாகிலு தவறிப் போகவில்லை.''

II கொரி: 5: 20 ''தேவனுடைய வாக்குத்தத்தங் எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவ குள் ஆமென் என்றும் இருக்கிறதே.''

மத். 24:35 ''வானமும் பூமியும் ஒழிந்து போம்,
ன் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை.''

வேதாகம காலத்தில் விசுவாசத்தின் மக்கள்
சொல்லப்பட்ட'' தேவனுடைய வார்த்தைகளின்படி
ந்தார்கள். இன்றைக்குகு நாம் ''எழுதப்பட்டுள்ள''
வனுடைய வார்த்தைகளின்படி நடக்கிறோம்.

''நான் கர்த்தர், நான் பேசுகிறேன், நான் பேசுகிற
ார்த்தை நிறைவேறும் நான் வார்த்தையைச் சொல்லு
ன், அதை நிறைவேறவும். பண்ணுவேன் என்று கர்த்த
கிய ஆண்டவர் சொல்கிறார்.'' (எசே. 12:25)

''அவர் (தேவன்) தாம் சொன்ன வார்த்தைகளை
றைவேற்றுகிறார்'', என்று தானியேல் சொல்லுகிறார்.
ானி 9:12)

''கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்
ருக்கும்'' என்று பேதுரு சொல்லுகிறா. (I பேது 1:25)

''எல்லா சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம்
சயமாயிருக்கும்'' (ரோம. 4:16) ''வாக்குத்தத்தம்
ண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார்'' என்று
ல் கூறுகிறார். (ரோம. 4:21)

''தேவனுடைய வார்த்தைகளில் ஒன்றும் வல்லமை
லாமல் போகாது.'' (லூக். 1:37 பு.தி)

இன்றைக்குத் தேவனுடைய வார்த்தையை நம்பு-
நேரமே அவருடைய வார்த்தையில் நட.

இந்த சிறிய புஸ்தகம் உனக்குப் புதிய வெளிச்சத்தைக்
ாண்டு வந்துள்ளது: இப்பொழுது இந்த ஒளியில் நட.

இது உன்னுடைய விசுவாசத்தைக் கட்டியிருக்கிறது.
த விசுவாசத்தோடே கிரியைகளை நடப்பி.

இது தேவனுடைய வாக்குத்தத்தங்களினால் உன்
ஒன்று சேர்க்கிறது. இப்பொழுது அந்த வாக்குத்தத்
களில் நட.

கையும் காலும் கட்டப்பட்டுச் சிறையில் போ
பட்ட ஒரு மனிதன் மன்னிப்புக்காக ஒரு கடிதம் எ
எண்ணுகிறான் என்று வைத்துக்கொள்வோம். சிறையி
புக்காரன் ஒரு கடிதத்தைக்கொண்டுவந்து நீ விண்ணப்
பண்ணியது உனக்குக் கிடைத்தது என்று சொல்லுகிற
நன்றியுள்ளவனாய்ச் சிறையை விட்டு வெளியேற வேண்டு

ஏனென்றால் இப்பொழுது அவன் நேர்மைய
விடுதலை பெற்றவன். இதுதான் அவன் செய்யவேண்டிய
சிறையிருப்புக்காரன் வந்து கட்டவிழ்த்துவிட்டு கதவுகளை
திறந்துவிட்டு, வெளியேறச்செய்து, ''நீங்கள் விடுதலை
னீர்கள், சமாதானத்தோடே போங்கள்'' என்று சொ
வதாக வைத்துக்கொள்வோம்.

ஆனால் அந்த மனிதன் சொல்லுகிறான், ''மன்னி
பெற்று, விடுதலையானேன் என்றும் கடிதம் கூறுவத
நம்புகிறேன்; ஆனால் நான் சிறையில்தானிருக்கிறேன்.''

''கதவுகள் திறந்திருக்கிறது, வெளியேவா'' எ
கிறான் சிறையிருப்புக்காரன்.

''கதவுகள் திறந்திருக்கிறது என்று எனக்குத் தெரி
நான் வெளியே வந்தால் விடுதலையாவேன் என்றும் தெரியு
ஆனால் நான் வெளியே இல்லை'' என்கிறான்,

''நல்லது வெளியே வா'' என்று சிறையிருப்புக்கார
வற்புறுத்திக்கூறி, ''மன்னிப்பு அடைந்ததில் நம்பிக்
உனக்கு இல்லையா? '' என்கிறான்.

''ஆம்! நான் ஒவ்வொரு வார்த்தையையும் ந
கிறேன், ஆனால் ஒருபோதும் இந்த இடத்தைவிட்டு வெளி
போவேன் என்று எனக்குத் தோன்றவில்லை'' என்கிறான்

அப்படிப்பட்டவனுக்கு மன்னிப்பு ஒரு பிரயோஜன இல்லை. ஏனென்றால் அவன் அதின்படி நடப்பதில்லை. போலவே வாக்குத்தத்தங்களின்படி நடக்காதவர்களுக் அதினால் ஒரு பிரயோஜனமும் கிடையாது.

நீ எவ்வளவு அழுது கெஞ்சி ஜெபம் செய்து உபவாசித் லும் பரவாயில்லை; அவருடைய வார்த்தையில் நடக்கா டால் உன்னுடைய விசுவாசம் செத்ததாயிருக்கும் க்கு ஒரு பிரயோஜனமும் இல்லை.

விசுவாச ஜெபத்தை உனக்காக எத்தனை பேர் ஜெபித் லும் பரவாயில்லை, உன்னுடைய சொந்த அவநம்பிக் யும் தேவனுடைய வார்த்தையின்படி நடக்காமலிருந்த அந்த ஜெபங்களை சக்தியற்றதாக்கும்.

அவருடைய வார்த்தையின்படி நடக்க மறுப்பது, பத்தின் பலனை ஏற்றுக்கொள்ள மறுப்பதற்குச் சமான தம். அவருடைய வாக்குத்தத்தங்களில் நடக்காமலிருப் ஜெபத்தின் பதிலை அடைந்து அதை விசுவாசியாமலிருப் ற்கு சமானமாகும்.

பதிலை அடைந்தேன் என்று நீ நம்பின பிறகுதான் னைச் சொஸ்தம் செய்ய ஆரம்பிப்பேன் என்று தேவன் க்குத்தத்தம் பண்ண வில்லை.

தேவனுடைய வார்த்தையின்படி நடக்கும் ரகசி தை நீ கற்றுக் கொள்ளவில்லையானால் நீ சொஸ்தமான னும் அந்த வியாதி உன்னிடமாய் திரும்பும்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களின்படி நடப்பது னுடைய விசுவாசத்தை நிரூபிக்கிறது.

சகல விசுவாசங்களும் உண்டு என்று சொல்லுகிற னகர் அவர்கள் சொல்லுவதற்கு எதிர்மாறாகவே நடக்

இருர்கள். உதாரணமாக ''எனக்கு பெரிய விசுவாசம்தான் உண்டு. எப்பொழுதும் நான் வேதத்தை நம்புகிறேன்! ஆனால் எப்படியோ நான் குணமாகவில்லை. விசுவாசிக்க அதிகம் முயற்சிக்கிறேன், ஆனால் நான் சுகமானதாக எனக்குத் தெரியவில்லை'' என்கிருர்கள். தொடர்ந்து தங்கள் படுக்கையிலேயே இருக்கிருர்கள், சகல உதவியையும் ஏற்றுக் கொள்ளுகிருர்கள்.

அப்படிப்பட்டவர்கள் தேவன் கூறியவற்றை அசட்டை செய்கிருர்கள், ''அவருடைய தழும்புகளால் நாம் குணமானேம்.'' அவர் ஏற்றுக்கொண்ட தழும்புகளினுல் நம்மை சுகமாக்கி, கிறிஸ்துவில் அவன் சுகமாயிருக்கிருன் என்று நம்புவதற்கு மறுக்கிருன்.

அவருடைய வார்த்தை உண்மை என்று தலையால் நம்புகிருன். ஆனல் அவன் இருதயத்தில் ஒருபோதும் நம்பவில்லை, தேவனுடைய வார்த்தைகளின்படி ஒருபோதும் நடக்கவும் இல்லை.

விசுவாசமானது வார்த்தைகளைவிட கிரியைகளில் நிருபிக்கப்பட வேண்டும். மாற்கு 2-ல் கூறப்பட்டபடி அந்த நான்கு மனிதர்கள் திமிர்வாதம் பிடித்த மனிதனைச் சுமந்து கொண்டுவந்து கூரையின் வழியாய் இயேசு இருந்த இடத்திற்கு அனுப்பிய பொழுது இயேசு, ''அவர்கள் விசுவாசத்தைக் கண்டு'' அவர்களுக்கு எவ்வளவு விசுவாசம் உள்ளது என்று அவர்கள் கூறக் கேட்காமல், அவர்கள் விசுவாசத்தின் அளவைக் கண்டு அந்த மனிதனைச் சொஸ்தமாக்கினுர். கிரியைகளினுல் ஆன அவர்களின் விசுவாசத்தைக்கண்டார்.

ஒருபோதும் உன்னுடைய விசுவாசத்தைக் குறித்துப் பேச அல்லது முகஸ்துதி செய்யாதே, உனக்கு விசுவாசமுண்டானுல், நல்லது. ''விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்'' (எபி. 11:6) ஆனுல்

எப்பொழுதும் அதைக் குறித்துப் பேசாதே. விசவாசத்தைக் கிரியைகளில் நடத்து அதுதான் நம்பிக்கை.

''உன் பரிகாரியாகிய கர்த்தர் நானே'' ''உன் நோயை குணமாக்குகிறவர்'' என்று தேவன் கூறிஞல், பின் அதில் நட. நலப்படுத்த தேவனேக் கிரியைச் செய்யச் செய். படுக்கையில் படுத்துக் கொண்டு, உன்னுடைய நோயைப்பற்றி கூறிக்கொண்டிராதே.

ஆனுல் எழுந்து, அவருடைய வார்த்தையில் தேவனே ஏற்றுக்கொண்டு உன்னுடைய விசுவாசத்தை கிரியையில் காட்டு. உனக்கான அவருடைய வார்த்தையை தேவன் நலமுறச்செய்வார். இயேசுவில் வார்த்தை நிலேத்திருந்தது போல் உன்னிலும் நிலேத்திருக்கட்டும். அவருடைய வார்த்தையில் நடக்கும்பொழுது உன்னுடைய விசுவாசம் பெலப்படும்.

''வார்த்தையைப் பற்றிப் பேசுகிறவஞக அல்ல,'' வார்த்தையைச் செய்கிறவஞக, வார்த்தையைப் பயிற்சிக்கிறவஞக ஆவாய். உனக்குச் சமீபித்திருப்பதைவிட வேறு யாரிடமும் சமீபித்திருக்கமாட்டார். உனக்குச் சீக்கிரமாய் பதிலளிப்பதைவிட வேறுயாருக்கும் பதிலளிக்கமாட்டார். அவர் உன் தேவன். அவருடைய வார்த்தைகள் உன்னுடையவைகள். பரிகாரியாகிய கிறிஸ்து உன்னுடையவர்.

''நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்'' (யாத்.15:21) என்று தேவன் கூறுவாராஞல், நீயும் இந்த வார்த்தைகளே நம்பிஞல் அவைகளில் நடப்பாய். அப்பொழுது படுக்கையில் இருப்பவன் விசுவாசத்தில் எழும்புவான்; பூர்ண சுகமாவான்.

நொண்டி மனிதன் மானேப்போல் குதித்தோடுவான்; ஊமையின் நாவு பாட ஆரம்பிக்கும்; செவிட்டுக்காதுகள் நன்ருகக் கேட்கும்; நோவுகள் பறந்து போகும். இருள் மறைந்து விடும்.

தேவனையும் அவருடைய வார்த்தையையும் ஏற்றுக் கொண்டு, வார்த்தையின்படி நடந்து சுகமாவதற்கு முன்னால் உன்னால் செய்யமுடியாத காரியங்களை இப்பொழுது செய்வாய்.

நீ சுகமாயும் திடகாத்திரமாகவும் இருப்பதற்கான சகலத்தையும் தேவன் உன் தேகத்திலே உண்டாக்குவார். பெலவீனம் திடகாத்திரமாக மாறும்; மரணம் ஜீவனாக மாறும்; வியாதி ஆரோக்கியமாக மாறும்; செய்யக்கூடாத காரியங்கள் செய்யக் கூடியவைகளாக மாறும்.

ஜமேக்காவில் கிங்ஸ்டன் என்ற இடத்தில் தெய்வீக சுகம் அளிக்கும் ஆராதனை நடந்த இடத்தில் மாலை 6-30 மணிக்கு வாசல் திறக்கப்படுவதற்கு முன்னரே ஜனங்கள் திரளாய் வந்து மதிலைச் சுற்றிலும் இருந்தார்கள்.

ஒரு ஏழை ஸ்திரீ வியாதியினால் பீடிக்கப்பட்டிருந்த தன் கணவனைக் காட்டிலிருந்து தன்முதுகில் சுமந்துகொண்டு வந்தாள். அந்த இடத்தை அடைந்ததும் கதவுகள் பூட்டப் பட்டிருப்பதையும் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு மதிலின்மேல் ஏறிக் கட்டிடத்திற்குள் செல்வதையும் கண்டு தன் கணவனை மதிலினுள்ளே எறிந்துவிட்டு தானும் சுவரில் ஏறிக் குதித்து உள்ளே சென்று கணவனை தூக்கிக்கொண்டு, சுகத்திற்காக ஜெபம் செய்ய வந்துள்ள ஜனங்கள் நிற்கும் வரிசையில் நின்றாள்.

இது விசுவாசத்தைக் கிரியையில் நடப்பிப்பதாகும். தேவனுடைய வல்லமையிலே சொஸ்தமாகி அவன் நடந்து வெளியே வந்தான் என்று கூறவே அவசியமில்லை. கிரியை யில் கூடிய விசுவாசம் எப்பொழுதும் வெற்றி பெறும்.

தேவனை நம்புவதற்கும் அவருடைய வார்த்தையில் நடப்பதற்கும் ஒருபோதும் பயப்படாதே. மரண அவஸ் தைப்பட்டுக்கொண்டிருந்த மகளின் தகப்பனிடம் இயேசு கூறியவற்றை நினை; ''பயப்படாதே, விசுவாசி'' (மாற். 5:36)

8

கருத்தடக்கம்

கிறிஸ்துவிலிருந்து உண்டாகும் அற்புதசுகத்தைப் பெறுவதற்கான ஏழுபடிகளை உங்களுக்குக் காட்டினேம்.

1. அற்புதங்களின் காலங்கள் கடந்து போகவில்லை என்றும் சரீரசுகமானது கிறிஸ்துவினுடைய ஊழியத்தின் ஒரு பாகம் என்றும் அறிந்துகொள்.

2. வேதத்தில் கூறப்பட்டுள்ள சுகமளிப்பதற்கான வாக்குத்தத்தங்கள் உனக்கும் ஏற்றதுதான் என்று உறுதியாய் அறிந்துகொள்.

3. நீ நன்ருக இருக்க தேவன் விரும்புகிருர் என்றும், சாத்தான் தான் நீ கஷ்டப்படுவதை விரும்புகிருன் என்றும் அறிந்துகொள்.

4. தெய்வீகசுகம் இரட்சிப்பின் ஒரு பாகம் என்று அறிந்துகொள்.

5. அவர்களின் வாக்குத்தத்தங்களின்படி உன்னை சுகப்படுத்தும்படி அவரைக் கேட்டுக்கொண்டு, உன்னுடைய ஜெபத்தை அவர் கேட்கிருர் என்பதை விசுவாசி.

6. நீ ஜெபம் செய்யும்பொழுது நீ கேட்டவைகளை பெற்றுக்கொண்டாய் என்று நம்பு.

7. உன்னுடைய ஜெபத்தின் பதிலுக்காகவும் அவருடைய வாக்குகளின் கிரியைகட்காகவும் அவரை ஸ்தோத்தரி.

இதே விசுவாசப்படிகள்தான் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுத்த எந்த வாக்குத்தத்தத்தையும் பூர்த்தி செய்வதாகும். இந்த ஏழு விசுவாசப் படிகளையும் கவனமாகப் பின்பற்றுவோமானல் கிறிஸ்து மரித்ததின் மூலம் நமக்குக் கொடுக்கக்கூடிய எந்த ஆசீர்வாதத்தையும் உன் ஜீவியத்தில் பெரிதும் விளங்கச்செய்வாய்.

உண்மையில், விசுவாசத்தின் படிகளை மூன்று விதமாக கூறலாம்.

1. தேவனுடைய வாங்குத்தத்தங்களை அறிந்து கொள்.

2. அவர் செய்வதாகக் கூறிய வாக்குத்தத்தங்களை செய்யச் சொல்

3. அவர் செய்வேன் என்று வாக்குப்பண்ணிய காரியங்களைச் செய்து விட்டதுபோல் நீ நட.

தேவன் கூறியவாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்ள அல்லது கிறிஸ்து கொடுத்துள்ள ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள இவைகள்தான் மூன்று முக்கிய படிகள்.

வாக்குத்தத்தங்களைப் பற்றிய அறிவு முதலாவது வருகிறது; பின்பு ஜெபம் வருகிறது; கிரியை துதியோடு கூடி இறுதியில் வருகிறது.

தேவன் உனக்குக் கொடுத்துள்ள வாக்குகளைக் குறித்தான சுத்த அறிவை அடைந்து, அவைகள் நிறைவேற்றும்படி தேவனிடம் நீ கேட்கும்பொழுது அவராலேயன்றி

உன்னால் நிறைவேற்ற முடியாத காரியத்தை, விசுவாசத்தைக்கொண்டு நீ ஆரம்பிக்கும்படியாக எதிர்பார்க்கிறார்.

உன்னுடைய கிரியைகளும், துதியும் உன்னுடைய விசுவாசத்தின் உண்மையை ரூபிக்கிறது. தேவன் தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்தி, அவருடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார்.

உன்னுடைய விசுவாசத்தின்படி நட. நீ அவர் உன்னைச் சுகப்படுத்த கேட்குமுன்னதாகச் செய்ய முடியாதவைகளை செய்ய ஆரம்பி. அவர் வாக்குப்பண்ணினதை நிச்சயப்படுத்துவார். சந்தேகங்களையும் பயங்களையும் விட்டு எழுந்திரு. உன்னுடைய விசுவாசத்தை உன்னுடைய கிரியைகளினால் நிரூபி.

சாத்தானுடைய சிறையிருப்பான வியாதியிலிருந்து விடுதலைப்பெறு. வேதாகமமும் தேவனுடைய வாக்குத்தத்தங்களும் பாவத்திலும், வியாதியிலுமிருந்து உன்னை விடுவிக்கும் தேவ அத்தாட்சியாகும். தேவனுடைய வாக்குத்தத்தம் உன்னுடைய விடுதலையின் அடிப்படை என்று அறிக்கையிட்டு, அடிமைத்தன சிறையிலிருந்து வெளியேவா.

தேவனுடைய வார்த்தையானது உண்மை என்று உனக்குத் தெரியும், ஆனால் நீ ஒருபோதும் அதில் நடந்ததில்லை, உனக்கு விசுவாசம் இருந்தது, ஆனால் அந்த விசுவாசத்தை நீ ஒருபோதும் கிரியைகளில் காண்பிக்கவில்லை. அது தூங்கும் நிலையில் ஆக்கிவிட்டாய். ஏனென்றால் நீ தேவனுடைய வார்த்தையின்படி நடக்க மறுத்து விட்டாய்.

இப்பொழுது, நீ விடுதலை பெற்றுப் போகலாம். கர்த்தரைக் கூப்பிடு. அவருடைய வாக்குத்தத்தத்தை அறிக்கை செய். அதை நிறைவேற்ற அவரைக்கேள். உன் கூப்பிடுதலைக் கேட்கிறார் என்று விசுவாசி. விசுவாச சுகத்தை உரிமை கொண்டாடு.

அவருடைய உதவியின்றி நீ செய்ய முடியாத காரியத்தைக்கூட விசுவாசத்தில் செய்ய ஆரம்பி. உன்னுடைய நோவுகள் நீங்கும். உன்னுடைய பெலவீனம் பெலமாக மாறும். உன்னுடைய பார்வையற்ற கண்களுக்கு வெளிச்சம் உண்டாகும்.

உன்னுடைய மந்த செவிக்குள் ஒலி ஊடுருவும். உன்னுடைய வாத விரலுக்குள் ஜீவன் செல்லும். அவனுடைய வார்த்தையை உனக்கு நன்மையாக்குவார்.

நாணயமான ஜீவியம் பண்ணும்பொருட்டு மீன் பிடிக்க முயன்றும் ஒன்றும் அகப்படமால் ஒரு இரவு முழுவதும் தங்கள் வலைகளுடன் கஷ்டப்பட்ட சீஷர்களை நினை. அப்பக்கமாக இயேசு வந்து கூறியதாவது "ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன் பிடிக்கும்படி உங்கள் வலைகளைப்போடுங்கள்"

அதற்கு சீமோன், "ஐயரே, இராமுழுதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை: ஆகிலும் உம்முடைய வார்த்தையின் படியே வலையைப் போடுகிறேன்" என்றான் மறுபடியும் கேளுங்கள். "ஆகிலும் உம்முடைய வார்த்தையின் படியே வலையைப் போடுகிறேன். (லூக்.5:4,5)

தன்னுடைய எஜமான் கூறும் வினயமற்ற வார்த்தைகளைத் தர்க்கம் பண்ணுவதற்காகப் பேதுரு சும்மா நிற்கவில்லை; காரியம் எவ்வளவு நம்பிக்கை அற்றது என்று விவரிப்பதற்கும் இல்லை. அந்த இடத்துத் தண்ணீர் தன்மையை அறிந்தவன் என்றும், அந்த இடத்தில் மீன்கள் இல்லையென்றும் இருந்திருக்குமானால் பிடிப்பதற்கு ஏற்ற சுறுசுறுப்புத் தன்மையை உடையவன் என்றும், கூறுவதற்காகவும் தயங்கிக் கொண்டிருக்கவில்லை.

ஒரு சமயம் அநேக வருடங்களாக நீ நோய்வாய்ப் பட்டிருக்கலாம். உனக்காக அநேக ஜெபங்கள் செய்யப் பட்டிருக்கலாம். உன் சஞ்சல நேரத்தில் உனக்காக என்ன

தவி செய்யமுடியும் என்று தலை அசைத்திருப்பார்கள் ரு பெரிய வல்லமைதான் உன்னைச் சுகப்படுத்தும் என்று றியிருந்திருக்கலாம்.

சுகத்திற்கான அநேக காரியங்களைப் பலதடவை மயற்சித்துத் தோல்வி அடைந்திருக்கலாம், ஆனால் சிநேகி னே ''அவருடைய தழும்புகளினால் குணமாகுகிறோம்'' ஏசா 53:5) என்ற வேத வார்த்தை இப்பொழுதும் கூறு றது.

புதிய தைரியத்தைப் பெற்றுக்கொள். ''ஆகிலும், ம்முடைய வார்த்தையின்படியே நான் மறுபடியும் வரு வேன்,'' என்று இந்தத்தடவை கூறு. உம்முடைய வார்த் தையின்படியே நான் பூர்ண சுகமடைவேன்.'' தேவனுடைய வார்த்தை உன்னைத்தவறச்செய்யாது உன்னுடைய முழு இருதயத்தோடும் நம்பி, அவருடைய வார்த்தையில் உன்னு டைய விசுவாசத்தை நடப்பிப்பாயாக.

ஊமையான ஆவிபிடித்த மகனின் தகப்பனிடம் இயேசு சொன்னதாவது, ''நீ விசுவாசிக்க கூடுமானால்'' விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் ஆகும் என்றார். (மாற் 9:23) அவர் சொல்லுகிறவைகளெல்லாம் நடந்தேறும் என்று விசுவாசி. ஒன்றையும் சந்தேகிக்காதே ஆனால் விசு வாசி. "அவரை விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் ஆகும்.''

நீ அவரை விசுவாசித்தாயானால் நீ விடுதலை பெற்று, நீ இப்பொழுது இருக்கும் இடத்திலேயே சுகமடைவாய். உன்னுடைய சுகத்தைக் கெடுத்த சத்துருவைக் கடிந்து கொண்டு உன்னுடைய அற்புத சுகத்தைப் பெற்றுக்கொள்.

இவ்விதமாக ஜெபம் செய். பரம பிதாவே! இந்த உண்மைகளை நான் அறியச்செய்வதற்காக நன்றி கூறுகிறேன். கிறிஸ்து என்னுடைய வியாதிகளையும் பெலவீனங்களையும் எனக்காக சுமந்தார் என்பதற்காக நன்றி பாராட்டுகிறேன். என்னுடைய ஸ்தானத்தில் கிறிஸ்து எனக்காக அவைகளை

சுமந்தபடியால் நான் அவைகளைச் சுமக்க வேண்டியதில்லை யென்று நன்றி செலுத்துகிறேன்.

என்னுடைய வியாதியின் காரணமாகச் சாத்தான் கேள்வி கேட்கப்பட வேண்டியவன் என்றும், நீர் என்மேல் வியாதிகளை சுமத்தவில்லை என்றும், நான் நல்ல திடகாத்திரமாய் இருந்து உம்மை மகிமைபடுத்தி உமக்கு ஊழியம் செய்வதையே நீர் விரும்புகிறீர் என்றும் இந்தச் சத்தியங்களை வெளிப்படுத்தினதற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

சகல பிசாசின்மேலும் எனக்குள்ள உரிமையான அதிகாரங்களை அறியும்படி செய்ததற்காக நான் நன்றி கூறுகிறேன்.

இப்பொழுதும் பிதாவே, நீர் எனக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்கள் நிறைவேற எதிர்நோக்கி, உம்முடைய வார்த்தைகளின்படி வந்துள்ளேன்.

''உன்னைக் குணமாக்குகிற காத்தர் நானே'' என்ற வாக்கின்படி இப்பொழுதே இதைக் செய்யக் கேட்கிறேன், இயேசுவின் நாமத்தில் உம்முடைய வார்த்தையின்படியே கேட்கிறேன். எனக்குக் கஷ்டத்தை வருவித்த சத்துருவை கடிந்து கொள்கிறேன்.

வியாதிப்பட்ட என் நாட்கள் நீங்கவும், என் தேவனுடைய வல்லமையினாலே எல்லா அறிகுறியும் அழியும்படியும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கட்டளையிடுகிறேன். பிதாவே என்னுடைய ஜெபத்தைக்கேட்டு இப்பொழுது பதிலளிப்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். உம்முடைய வாக்குத்தத்தத்தின்படி இப்பொழுது சுகத்தைக் கேட்கிறேன்.

என்னுடைய வியாதியின் காரணம் அழிந்துவிட்டபடியால் உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் வாக்கின்படி நான் குணமடைவேன். இயேசுவின் நாமத்

தில் ஜெபம் செய்தேன், என்னுடைய விண்ணப்பம் கேட்கப்பட்டு, பதிலளிக்கப்பட்டது என அறிவேன். ஆமென்!

இப்பொழுது நீ ஜெபம் செய்து உன் வியாதியை இயேசுவின் நாமத்தில் கடிந்து கொண்டாய், உன்னுடைய விண்ணப்பத்தை தேவன் கேட்டு பதிலளித்தார் என்று நிச்சயப்படு.

விசுவாசத்தை அறிக்கை செய்வதில் நிலைத்திருங்கள் ஏனென்றால் வாக்குப் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

தேவனுடைய வார்த்தையை அறிக்கையிடுவதன்றி பிற வார்த்தைகளை பிசாசானவன் உன் வாயிலிருந்து கேட்கவிடாதபடி செய். தேவன் உனக்குச் செவிகொடுத்து உனக்கு பதிலளிக்கவில்லையென்று சாத்தான் கூறினால், அவனை எதிர்த்து நின்று விசுவாசத்தில் தரித்திரு. அவன் உன்னைவிட்டு பறந்து போவான்.

அவன் பொய்க்காரன். தேவனுடைய வார்த்தைகள் உண்மை. உன்னிடம் நிறைவேறும்படியாக தேவன் பார்த்துக்கொண்டிருக்கிறார். முன்பு செய்யமுடியாத காரியங்களைச் செய்ய இப்பொழுது ஆரம்பி. அவைகளை இயேசுவின் நாமத்தில் செய்து, தேவன் கொடுத்ததும், நீ கேட்டதுமான குணமாக்குதலைப் பெற்றுக்கொள்.

இந்தச் சத்தியங்களை அறிந்து அவைகளின்படி நடந்து கர்த்தரின் மூலமாய் அற்புத சுகமடைந்தவர்களிடமிருந்து ஒவ்வொரு வாரமும் எங்களுக்குச் சாட்சிகளிருக்கின்றன.

தேவன் மற்றவர்களுக்கு எதைச் செய்தாரோ, அதை உனக்கும் செய்ய ஆயத்தமாயிருக்கிறார்.

சபையானது தன்னுடைய சேவையை ஆரம்பித்த பொழுது, அது அற்புதங்கள் நிறைந்த சேவையாகவேயிருந்தது. கிறிஸ்துவைப் புறக்கணித்த ரோம ஆளுகையும் கூட நடுங்கத்தக்கதான நிலைமையில் அப்போஸ்தலர்களுடைய கைகளினால் ஏராளமான அற்புதங்கள் செய்யப்பட்டு அந்நாட்களிலிருந்த மார்க்க முறைகளைக் கூட மாற்றி அமைக்கக் கூடியதாய் இருந்தன.

மரித்தோரிலிருந்து தேவன் எழுப்பின கிறிஸ்து அதே வல்லமையை உடையவர் என்றும், அவர்கள் அவருடைய நாமத்தினாலே இட்ட கட்டளைக்கு பதிலாய் அவர் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டு மரிப்பதற்கு முன் செய்த அதே அற்புத அடையாளங்களைச் செய்து வருகிறார் என்றும் அவர் மரித்தும் திரும்பவும் உயிர்த்தெழுந்தார் என்றும் அவர் மாறாதவர் என்றும் கண்டுபிடித்தார்கள். அவருடைய நாமத்தினாலே வியாதியஸ்தர் சுகமடைந்தார்கள், மரித்தோர் உயிர்த்தார்கள். பிசாசுகள் துரத்தப்பட்டன.

ஆதிச்சபையின் சரித்திரத்திலுள்ள முதல் வருஷங்கள் ''அப்போஸ்தலர் நடபடிகளில்'' சொல்லியிருக்கிற பிரகாரம் சபைக்கு மாதிரியாய் அதனுடைய ஆண்டவரும் எஜமானராகிய அவர் திரும்பி வரும் வரைக்கும் இருக்கும். இது பழங்கால கிறிஸ்து சமயம்.

நமக்குக் கிறிஸ்தவ சமயத்தில் எல்லாவற்றைக் காட்டிலும் மேலான ஒன்று இல்லாவிட்டால் நாம் புற மதஸ்தருக்குக் கொடுப்பதற்கு மார்க்கத்தை தவிர நம்மிடத்தில் வேறு ஒன்றும் இருக்கமாட்டாது, உண்மை கிறிஸ்தவ சமயம் என்பது மார்க்கமல்ல.

மார்க்கமென்பது ஒரு சடங்காசார ஆசரிப்பு, ஆனால் கிறிஸ்தவ சமயம் என்பது ஜீவன்.

கிறிஸ்தவ சமயம் என்பது மனுஷனில் வெளிப்படுத்தப்பட்ட இயேசு கிறிஸ்துவின் இருதயமும், சுபாவமும் ஆகும்.

கிறிஸ்தவ சமயம் என்பது அற்புத ஜீவியமாகும். அது அற்புதங்களோடு ஆரம்பித்தது; அற்புதங்கள் தொடர்ந்து நடைபெறுவது அதற்கு அடிப்படையுள்ளது; அது அற்புதங்களினால் பிரபல்லியப்படுத்தப்படுகிறது. புற மதஸ்தரின் பசிதாகத்தை திருப்தி செய்யக்கூடிய ஒரே ஜீவன் அதுவே.

வேதாகமம் ஓர் அற்புத புஸ்தகம். தெய்வீக சம்பவங்கள் எழுதப்பட்டுள்ள ஒன்று. ஆபிரகாமிலிருந்து ஆரம்பித்துப் பழைய ஏற்பாட்டிலுள்ள பெரியவர்கள் வரை அற்புதங்களைச் செய்தவர்கள். அதாவது, அவர்களுடைய உறுதியும் முயற்சியுமுள்ள விசுவாசத்திற்கு மாறுத்தரமாய் தேவன் அற்புதங்களைச் செய்தார்.

இவ்வித அற்புதங்கள் உயிரற்ற புற மதஸ்தருடைய தெய்வங்களினின்று ஜனங்களைப் பிரிப்பதற்காகவும், ஜீவனுள்ள தேவனை அவர்கள் தொழுது கொள்ளும்படி அவர்களை மாற்றுகிறதற்காகவுமே.

அற்புதங்கள் நின்றவுடன் ஜனங்கள் விக்கிரக ஆராதனைக்குள் ஆனார்கள். தொடர்ச்சியான வியக்கத்தக்க அற்தங்களைத் திரும்பவும் கண்ட பின் மாத்திரமே மறுபடியும் தேவனிடத்தில் திரும்பினார்கள்.

மனிதருக்கு ஜீவனுள்ள தேவன் வேண்டும். மனிதன் அற்புதத்தை வாஞ்சிக்கிறான்.

ஒரு மனிதனாவது ஸ்திரீயாவது எங்கேயாவது எழும்பி அவர்கள் ஜெபங்கள் கேட்கப்பட்டு அவர்களுடைய விண்ணப்பத்திற்கு மாறுத்தரம் கிடைக்கிறது என்று தெரிய வந்தால் போதும், உலகத்திலே உள்ள ராஜ தந்திரிகளுக்கும் பேர் பெற்ற தத்துவ சாஸ்திரிகளுக்கும் கூடாத திரள் கூட்டம் அங்கு கூடிவிடுகிறது.

அற்புதங்களைப்பற்றிய இவ்வித வாஞ்சை அறியாமையினால் உண்டாகிறதல்ல, ஆனால் காணப்படாத தேவனை

மனிதனடைய வேண்டுமென்பதை அவன் வாஞ்சிக்கிறதையே காட்டுகிறது.

உண்மையில் ஆதியிலிருந்தே மனுஷனில் தேவனுடைய நோக்கமும், தீர்மானமும் அவன் எல்லாவற்றிற்கும் மேலான திறமை வாய்ந்தவனுயிருக்க வேண்டுமென்பதே அவன் அவா, வாஞ்சை, எல்லாவற்றிற்கும் மேலான அதிகாரத்தன்மை இவையோடு சிருஷ்டிக்கப்பட்டவன். (கீழ்ப் பகுதி..............ஆண்டுக்கொள்ளுங்கள். ஆதி 1:28.)

கல்வியானது மனிதனிலுள்ள அற்புதமான வாஞ்சையை இல் பொருளாக்குவதில்லை.

சிலர், கல்வி அற்புதங்களின் ஸ்தானத்தை அடையுமென்றும் எனவே சபைக்கு எல்லாவற்றிற்கும் மேலான தேவனுடைய வல்லமை அவசியமிருக்காது என்றும் சொல்லுகிறுர்கள்.

இப்படிப்பட்ட எழுத்துக்களும் மூடத்தனமான பிரசங்கங்களும் சத்துரு ஏளனம் செய்வதற்கு ஏதுவானவை என்பதைச் சற்றும் உணராதிருக்கிறுர்கள்.

ஜீவிய காலமுழுவதுமாகச் செய்கிற ஆராய்ச்சி மற்றும் பிரசங்கத்தைக்காட்டிலும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினுல் செய்யப்படுகிற ஒரே பெரிய அற்புதம் மேலானது.

மனிதன் தேவனேக் கிரியை செய்கிறவராகப்பார்க்க விரும்புகிறுர்.

தத்துவ சாஸ்திரிகளின் பிரசங்கங்களினுலோ அல்லது ஆசிரியர்களினுலோ, மருத்துவ சங்கங்களினுலோ அல்லது ஸ்தாபனங்களினுலோ ஜாதிகள் ஒருபொழுதும் தங்கள் நிந்தையினின்று காக்கப்படவோ அவர்கள் பாவங்களினின்று மீட்கப்படவோ இல்லே.

ஆனால் நேற்றும் இன்றும் என்றும் மாறாத கிறிஸ்து வைப்பற்றும் புதிய தரிசனங்களையுடைய ஏழையான ஸ்திரீகளினாலும், புருஷர்களினாலும், மீட்கப்படுகிறார்கள்.

கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையையும் மையப் படுத்தியுள்ள ஒவ்வொரு உண்மையான எழுப்புதலிலும் அற்புதங்கள் நடைபெற்றது.

அற்புதங்களைக் காணுதலைவிடப் அவருடைய வார்த்தையை சரியானபடி கைப்படுத்துவது கூடாத காரியம்.

சாதாரண எல்லா மனிதரும் எல்லாவற்றிற்கும் மேலான ஒன்றை நாடுகிறார்கள். அவர்கள், தேவனுடைய வல்லமை வெளிப்படுவதைக்காண வாஞ்சிக்கிறார்கள்.

தெய்வம் இல்லையென்று மறுதலிக்கிற நாஸ்திக பேராசிரியருங்கூட, கூட்டத்திற்குள் நுழைந்துஅற்புதம் நடைபெறுவதைக்காண ஆசிப்பார். செத்த சடங்காச்சாரங்களில் உயிர்த்தெழுதலின் வல்லமை இல்லை. அற்புதங்களை நடப்பிக்கும் சக்தி அதிலே இல்லை.

எல்லாவற்றிற்கும் மேலான " தேவனிடத்திலிருந்து கொஞ்சம் மாத்திரமே கிடைக்கும்படி இனங்கள் தங்கள் ஆராதனையின் வழக்கமான முறைமைக்குப் புதிதான சில காரியங்களைப் பொறுக்கச் சம்மதிப்பார்கள்.

நாகரீகமுள்ள ஆண்களும், பெண்களும் கூட ஜீவனுள்ள தேவன் பேரில் நம்பிக்கையுள்ள கற்றறியாத ஒரு பிரசங்கியின் வார்த்தைக்குச் செவி கொடுப்பார்கள். அவன் செபிக்கிறான், அவனுக்கு மாறுத்தரவும் கிடைக்கிறது.

இன்றைக்கு, நமக்கு வேண்டியது அற்புதங்களல்ல, ஏனெனில் அவைகளின் ஸ்தானத்தில் கல்வி வந்துவிடும் என்று சொல்லுகிறவர்களாகிய அவர்கள் சத்துருவாகிய சாத்தானால் பரிதாபகரமாக மயக்கப்பட்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் மனிதனுடைய

இருதயத்தின் வாஞ்சையையும், சுபாவத்தையும் குறித்த தங்களுடைய குருட்டாட்டமான அறியாமையை வெளிப் படுத்துகிறார்கள்.

அவன் அற்புத தேவனின் சந்ததியாக இருப்பதினால் அற்புதங்களைப்பற்றி மனிதனுடைய ஆழமான வாஞ்சை யானது அவன் எந்த ஜாதியானாலும் அல்லது என்ன நிலையிலுள்ளவனானாலும் அவனுக்குள் குடிகொண்டிருக்கிறது.

இதற்கு முன் ஒருக்காலும் இல்லாத நிலையில் மனி' தனுக்கு இயேசுகிறிஸ்துவின் அற்புத தொடுதல் இப்பொ ழுது அவசியமாயிருக்கிறது.

கிறிஸ்து இதற்குமுன் எவ்விதம் இருந்தாரோ அவ் விதமே இப்பொழுதும் அற்புத மூர்த்தியாயிருக்கிறார். கிறிஸ்துவின் ஜீவியத்திற்கு நாம் திரும்பவேண்டும். அவர் தம்முடைய ஜீவனோடும் வல்லமையோடும் நம்மில் ஜீவித் திருக்க இடங்கொடுக்க வேண்டும். அதுதான் உண்மை யான கிறிஸ்தவ சமயம். மற்றவை எல்லாம் பலனற்ற வழக்கமான முறையே ஆகும். இவை செத்த பிரார்த்தனை, சடங்குகள் அடங்கியதும் ஜீவனற்றதுமான வெறும் ஆசரிப் புகளே ஆகும்.

''ஜீவனுள்ள, அற்புதங்களைச் செய்யும் கிறிஸ்து வினண்டை திரும்பு,'' என்பதே நம்முடைய கோஷமாக இருக்க வேண்டும். எங்கெங்கு விசுவாசதைரியமுடையவர் களாய் மனிதர் கிரியை செய்கிறார்களோ, ஆங்காங்கு ஜனக் கூட்டம் திரண்டு கிறிஸ்துவின் வல்லமையோடு கூடிய அற் புதங்கள் நடைபெறுவதைக்காட்சியாகக் காண ஆவலோடு கூடுவார்கள்.

இயேசுவானவர் திரள் கூட்டம் ஜனங்களை அற்புதங் களினால் கவர்ந்தார். இன்றைக்கும் இயேசுவின் நாமத்தினாலே எங்கெங்கு அற்புதங்கள் நடைபெறுகின்றனவோ ஆங்காங்கு அதே விதம் செய்கிறார்.

அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

நாம் வேதத்தைப் பிரசங்கிப்போமானால், நாம் வேதத்திலுள்ள பலன்களையும் காண்போம்.

நாம் எந்த தேசத்தில் ஊழியம் செய்தாலும் சரி, ஆதி சபை பிரசங்கித்ததுபோல் பிரசங்கிப்போமானால் அந்த பலனை நாமும் காண்போம்.

இதற்குத் தடை என்ன? அற்புதங்கள், ஏன் குறைவு படுகின்றன?

உன்னுடைய பிரசங்கத்தைச் சோதித்துப்பார். "விசுவாசம் என்பது தேவனுடைய வார்த்தையைக் கேட்கிறதினாலே வரும்" என்று வேதம் கூறுகிறது.

இன்று, விசுவாசம் என்பது மதசாஸ்திர விற்பன்னர்களின் (வேதசாஸ்திரி) வார்த்தைகளைக் கேட்பதினால் போய் விடுகிறது.

நீ ஒருவார காலமாககூட உபவாசித்திருக்கலாம், ஆனால் நீ தப்பிதமான தூதைக் கொடுப்பாயானால் எவ்வித அற்புதங்களும் நடைபெறாது.

நீ இராமுழுதும் ஜெபித்திருக்கலாம், ஆனாலும் உன்னுடைய பிரசங்கம் தப்பிதமாயிருக்குமாயின் அதுயாதொரு பலனையும் கொடுக்கமாட்டாது.

எழுப்புதல் என்பது பிரசங்கிப்பிலேயே ஆரம்பிக்க வேண்டும், அது மதபிரச்சாரங்களிலே (மிஷனெறியிலே) ஆரம்பிக்கவேண்டும். தூது சரியாயிருக்கவேண்டும். இல்லாவிடில் மற்ற எல்லாப் பிரயாசமும் வீணாகும்.

சொந்த ஊரிலானாலும் சரி, வெளிதேசங்களிலானாலும் சரி, ஒரு பிரசங்கி தன்னுடைய போதனை, தன்னுடைய பிரசங்கம், தன்னுடைய செய்கை, இவைகளை திருத்திக்

கொள்ள விருப்பமுள்ளவனுயிருக்க வேண்டும். மற்றபடி அவனுடைய ஊழியத்தில் எழுப்புதல் உண்டாவது சாத்திய மல்ல.

''விசுவாசம் கேள்வியினுல் வரும்.......... அதாவது தேவனுடைய வார்த்தையினுல் '' மனுஷனுடைய ஐதீக உபதேசங்களினுல் அல்ல.

''நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தால் தேவ வசனத்தை அவமாக்குகிறீர்கள்'' என்று இயேசு சொன்னுர். (மாற். 7 :13)

''தேவனுடைய வார்த்தை கூறுகிறது'' என்கிற அடிப்படையின்படி எந்த ஒரு பிரசங்கியோ மதப்பிரச்சா ரகனே தன்னுடைய அபிப்பிராயங்களையும், தன்னுடைய முறைகளையும், தன்னுடைய உபதேசங்களையும்,தன்னுடைய பாரம்பரியங்களையும் மாற்றி அமைக்க விரும்பாவிடில் அவனு டைய ஊழியத்தில் எழுப்புதல் உண்டாவது கூடாத காரியம். ஏதேனும் ஒரு அங்கத்தினன் புதிய வெளிச்சத்தைப் பெற்றுலும் பிரசங்கி அதை அடக்கி விடுவார்.

நவீன சபையின் கருத்துக்களை உபதேசித்து, நாம் வேதத்தின் பலன்களை அடையமுடியாது. மதப்பிரசாரர் களின் சாதுரிய முறைகளை முற்றிலும் உபயோகித்துப் புறமதஸ்தரைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தவும் முடியாது. விசுவாசத்தின் நற்கனியை அனுபவிக்கவேண்டுமானுல் நாம் விசுவாசத்தின் விதையை விதைக்கவேண்டும். அதுதான் ''தேவ வார்த்தை'' (லூக் 8 : 11)

சரியான தூது பிரசிங்கப்பட்டு, தூதுக்கேற்ற கிரியை களும் நடப்பிக்கப்பட்டு, கிறிஸ்து தம்முடைய வல்லமை யோடு தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்துகிற பொழுது, வியாதியஸ்தர் சொஸ்தமடைவார்கள். பாவிகள் மனம் திரும்புவார்கள். எந்த இடத்திலுள்ள புற மதஸ்தனு னுலும் அவன் கிறிஸ்துவண்டை திரும்புவான்.

சத்தியத்தைச் சரியாய் எடுத்துரைப்பாயாகில் அற்புதத்தை நீ அடக்கி வைக்கமுடியாது.

''சத்தியத்தையும் அறிவீர்கள்.'' சத்தியம் உங்களை விடுதலையாக்கும். (யோவா 8 : 32)

''அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களை குணமாக்கினார்.'' (சங். 107 : 20)

''அவைகளைக் (தேவனின் வாக்குத்தத்தங்களை) கண்டு பிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும் அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.'' (நீதி 4 : 22)

எங்களுடைய சொந்தநாட்டிலும், வெளிநாட்டிலும் அற்புதகரமாய்ச் சுகமடைந்த ஆயிரக்கணக்கான மக்களில் ஒரு சிறு சதவிகிதத்தினரே தனித்தனியாக ஜெபிக்கப்பட்டவர்கள். பெரும்பான்மையோர் தாங்கள் வேதசத்தியங்களை பிரசங்க மேடையிலிருந்து அளித்த தூதினாலோ அல்லது அச்சடிக்கப்பட்ட சத்தியங்களை வாசித்ததினாலோ, அவர்களுடைய இருதயத்தில் தானாகவே உண்டான சொந்த விசுவாசத்தினால் சுகமடைந்துள்ளனர்.

பதினைந்திற்கு அதிகமான தேசங்களிலுமுள்ள எந்த சபையையும் சேர்ந்த எந்த அங்கத்தினரைக்கேட்டாலும் பவுலின் முள்ளைப்பற்றியும் யோபுவின் பருக்களைப்பற்றியும், தீமோத்தேயுவின் வயிற்று வலியைப்பற்றியும், தேவன் வியாதியினால் சிட்சித்து போதிப்பதுபற்றியும் தேவனுடைய மகிமைக்கென்று அல்லது வேறு காரணத்துக்கென்று வியாதியைச்சகிப்பது பற்றியும் அவர்கள் நன்கு அறிந்திருக்கக்கண்டேன்.

ஆனால் அவர்களில் ஒரு சிலர் மாத்திரமே அற்புதசுகம் கிடைக்கும் என்று வாக்களித்த வசனத்தை வேதத்திலிருந்து கூறக்கூடியவர்களாயிருக்கிறார்கள்.

பிரசிங்கிகளோ அல்லது மதப்பிரசாரகர்களோ இந்த சத்தியங்களைக்கற்பிக்காவிடில் ஜனங்கள் அவைகளை அறிய மாட்டார்கள்.

ஜனங்கள் இந்த சத்தியங்களை அறியாவிட்டால் அற்புதங்களுக்கான விசுவாசம் உண்டாயிருக்கமாட்டாது.

அற்புதங்களுக்கான விசுவாசம் உண்டாயிராவிட்டால் அவைகள் செய்யப்படமுடியாது.

அற்புதங்கள் செய்யப்படா விட்டால் புறமதத்தினர் சுவிசேஷத்தைக்கேட்க இழுத்துக்கொள்ளப்படுவதற்கோ, அவர்களை விசுவாசிக்க தூண்டுவதற்கோ ஒன்றுமிருக்கமாட்டாது.

தர்க்கிக்கப்பட முடியா அற்புதங்களின் விலை மதிப்பை அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள்.

—— ——

உங்களோடு ஒருநிமிடம்

நீங்கள் இப்பொழுது இந்தப் புஸ்தகத்தை வாசித்திருக்கிறீர்கள். இது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்குமென்று நம்புகிறோம். அப்படியானால் உங்களுடைய சிநேகிதருக்கு இதைக்குறித்துச்சொல்லுங்கள், மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதற்கு உதவியாயிருக்கும்படி அநேகப்பிரதிகளை வாங்கித்தருவியுங்கள்.

இவ்விதம் செய்வதினால், அவர்களுக்கு இந்தச் சத்தியங்களை அறியப்பண்ணி உங்களைச் சுற்றிலுமிருக்கிறவர்களுக்கு உதவி அளிக்கிறவர்களாகவும், ஒரு வேளை அவர்களுக்கு நீண்ட ஆயுளை உண்டுபண்ணுவதற்கு நீங்கள் காரணர்களாகவும் இருப்பீர்கள். ''நன்மை செய்யும்படி உனக்குத்திராணி இருக்கும்போது அதைச் செய்யதக்கவர்களுக்கு செய்யாமலிருக்காதே'' (நீதி 3 ; 27)

அறிவு ஒரு பொறுப்பை உண்டுபண்ணுகிறது என்பதை ஞாபகத்தில் வையுங்கள். அந்தப்பொறுப்பை நீங்கள் எடுத்துக்கொள்ளாவிட்டால் அது நியாயத்தீர்ப்பை உண்டுபண்ணும்.

நீங்கள் பெற்ற வெளிச்சத்தைக் கட்டுண்டவர்களாய் இருக்கிறவர்களுக்கும் பாவத்தினின்றும், வியாதியினின்றும் விடுதலைபெறுவதற்கான வேதாகம உரிமைகளைச் சரியானபிரகாரம் ஒரு போதும் போதிக்கப்பட்டு அறியாதிருக்கிற மற்றவர்களுக்கும் சொல்லுங்கள்.

இந்த மகிமையின் சத்தியத்தைப் பரப்புவதற்கு எங்களுக்கு உதவியாயிருங்கள். உங்களுடைய போதகரும் ஒவ்வொரு வேதாகம ஆசிரியரும், உங்களுடைய சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும், இப்பிரதி வைத்திருக்கிறார்களா என்று பாருங்கள். உலகத்திற்கு இந்த விடுதலை அவசியம். உங்களுக்கு விருப்பமானால் நீங்கள் இவ்விதம் செய்து அவர்களுக்கு உதவி புரியலாம்.

இவைகளை வாசித்த எத்தனையோபேர் வாசிக்கும் பொழுதே சுகமடைந்திருக்கின்றனர். அப்படிபட்டவர்களுடைய சாட்சிகள் தொடர்ந்து வந்துக்கொண்டிருக்கின்றன. நீங்களும் அவர்களில் ஒருவரானால் சுகமடைந்த உங்களுடைய சாட்சியை எங்களுக்கு எழுதி அனுப்பவும். இந்தச் சத்தியங்கள் உங்களுக்கு நலமும் புதிதுமானவைகளுமாயிருக்கும் பொழுதே எங்களுக்கு எழுதவும்.

Rs/6

T. L. Osborn

ஆசிரியரைப் பற்றி

சகோ. **T. L.** ஆஸ்பார்ன் அவர்களைப்பற்றித் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப் படுபவர்களில் முக்கியமானவர் இவர்.

Osborn Foundation என்ற நிறுவனத்தினை நிறுவி அதன் மூலம் மிகப்பெரும் சேவையினைச் செய்து வருகிறார். இவருடைய பிரசங்கங்கள் அடங்கிய கைப்பிரதிகள் உலகத்தின் அனைத்து மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

PEACE PUBLICATIONS

PERINBA STREET

NAGERCOIL - 629 001

INDIA

PEACE

புத்தக உலகில் புதிய முத்திரை

South India Press, Martandam